Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 07 23-08-94 செவ்வாய்க்கிழமை ஓசை 186

## தியாகி லெப், கேணல் திலீபனின் 7-வது ஆண்டுநினைவு நாள் ஏற்பாடு

தியாகி திலீபனின் 7-வது ஆண்டு நினைவு நாட்கள் அடுத்த மாதம் 15-ந் திகதி தொடக்கம் 26-ந் திகதி வரை நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நாட்களில் அடையாள உண்ணாவிரதங்கள், நினைவுகூரல் கருத்துரைகள் நடைபெறவிருக்கின்றன. பாடசாலைகள் மட்டத்தில் பதினொரு நாட்களும் மாணவர்கள், ஆசிரியர்கள் தியாகி லெப். கேணல் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்துவதோடு, உணர்வுபூர்வமான நினைவுகூரல் (6ஆம் பக்கம் பார்க்க)



காங்கேசன் துறைமுகத்தில் கட்டளைக் கப்பலையும்,டோறா பீரங்கிப் படகையும் தகர்த்து வீர சாதனை புரிந்த தாக்குதலில் வீரச் சாவடைந்த முதலாவது பெண் கடற் கருப்புலி கப்டன் அங்கயற்கண்ணி, தேசியத் தலைவர் வே. பிரபாகரனுடன் காணப்படுகிறார்

# கடற்படை தாய்க்கப்பல் தகர்ப்பில் முதற்பெண்கடற்கரும்புலிவீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைத் துறைமுகத்தினுள் கடந்த பதினாறாம் திகதி கடற்புலிகளின் விசேட படையணியினர் நடத்திய வெற்றிகரமான தாக்குதலின்போது கடற்கரும்புலிகளைச்சேர்ந்த பெண் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்,

தாக்குதலுக்குச் சென்ற கடற்புலிகளின் விசேட அணியில் அங்கம் வகித்த கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி என்பவரே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவார். இவர் கடற்கரும்புலிகளில் வீரச்சாவடைந்த முதற்பெண் போராளியுமாவார்.

கடற்புலிகளின் விசேட படையணியினர் மேற்கொண்ட இவ் வெற்றிகரமான தாக்குதலில், சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான கட்டளையிடும் தலைமைத் தாய்க்கப்பலும், அதிவேகப் பீரங்கிப் படகான டோராவும் மூழ்கடிக்கப்பட்டதும், பெருமளவு கடற்படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. இத்தாக்குதலானது சிறிலங்கா கடற்படைக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மகத்தான சாதனை படைத்த தாக்குதலில் வீரச்சாவடைந்த பெண் கடற்கரும்புலியான,

★ கப்டன் அங்கயற்கண்ணி,
புஸ்பகலா துரைசிங்கம்,
மண்கும்பான் மேற்கு,
5 ஆம் வட்டாரம்,
வேலணை.
தற்போதைய முகவரி:
மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு.

என்பவருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளது.

# பதவிக்காலம் முடியுமுன் டி. பி. பதவி துறக்கலாம்?

### நாளை விசேட இணைப்பு

முதலாவது பெண் கடற்கருப்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் உருவப்படம் நாளை ஈழநாதம் தினசரியுடன் இணைப்பாக வெளிவரவுள்ளது.



# அரசியல் வட்டாரங்களில் பேச்சு

[கொழும்பு]

பதவிக்காலம் முடிவடையும் முன்னரே ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தனது பதவியில் இருந்து விலகுவதற்கான நடவடிக்கைகளை தற்பொழுது மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி செயலகத்தின் நடவடிக்கைகளில் இருந்து தெரியவருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தீவிரமாகப் பேசப்படுகின்றது.

கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த தோல்வியைத் தொடர்ந்து இவ்விடயம் குறித்துத் தனது அந்தரங்க ஆலோசகர்களுடன் ஜனாதிபதி விஜேதுங்கா நீண்டநேரம் பேசியதாகவும் தெரியவருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றியைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பதவிப் போட்டி காரணமாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா மிகவும் கவலையடைந்து காணப்படுவதாகவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சித்தலைவரை தெரிவுசெய்ய ஐ.தே.க. இரகசிய வாக்கெடுப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடையே கடுமையான போட்டி நிலவுவதாகவும் இதனை அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களினால் தடுத்து நிறுத்த முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையைச் சமாளிப்பதற்காக இன்று காலை ஐ தே. க. பாராளுமன்ற உறுப்பினர்களிடையே இரகசிய வாக்கெடுப்பு எடுக்கப்பட இருப்பதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. கொள்கைக்கு சார்பாக இ. தொ. கா. நடக்கமாட்டாது

## ஜனாதிபதியிடம் தொண்டமான் தெரிவிப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஐ தே கவின் கொள்கைக்கு சார்பாக நடந்து கொள்ளமாட்டார்கள் என்று இ தொ கா தலைவர் சௌ. தொண்டமான் தெரிவித்தார்

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி டி- பி- விஜேதுங்காவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின் போது மேற்படி கருத்தை அவர் தெரிவித்துள்ளார்

தொடர்ந்து தெரிவித்த தொண்டமான், இதுகுறித்து ஐ தே க – இ தொ கா செய்து கொண்ட ஒப்பந்தத்தில் தெளிவாக தெரிவிக்கப்பட்டதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே இ தொ கா பட்டியல் உறுப்பினர்கள் தமது கட்சிக் கொள்கைக்கு அமையவே நடப்பார்கள் எனவும் இது குறித்து ஐ தே க எந்தக்கட்டுப்பாட்டையும் விதிக்க முடியாது எனவும் சுட்டிகாட்டியுள்ளார்.

# புதிய அரசிற்கு நெருக்கடி ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்பு படையினர் தொடர்பாக பிழையான தகவல்களை வெளியிட்டு இதன் மூலம் மக்களைக் கலவரம் அடையச் செய்து ஒரு மோதலை ஏற்படுத்த சதித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் இதுகுறித்த தகவல்கள் தமக்கு கிடைத்துள்ளதாகவும் சிங்கள பௌத்த மகா சம்மேளனம் மற்றும் சிறிலங்கா சுதந்திர பௌத்த சம்மேளனம் என்பன நேற்று தெரிவித்துள்ளன.

இதன்மூலம் புதிய அரசாங்கத்தை நெருக்கடியில் சிக்க வைப்பதே சதியாளர்களின் நோக்கம் என்றும், எனவே இந்த நிலையை கவனத்திற்கொண்டு சிறிலங்கா மக்கள் பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டு இக் குழுவினரின் முயற்சிகளை தோல்வியடையச் செய்ய வேண்டும் எனவும் இவ்வமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.



கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி

# ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

பாதுகாப்பு நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் இன்று செவ்வாய் காலை 4மணியுடன் ஊரடங்கு சட்டம் நீக்கப்பட ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் எனினும் புதிதாக வன்செயல் ஏற்பட்டால் குறுகிய நேர அறிவித்தலில் ஊரடங்குச்சட்டம் மீண்டும் அமுலாகும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# தொடரும் ஊரடங்குச் சட்டத்தால் அன்றாட நடவடிக்கைகள் பாதிப்பு

## உடன் நீக்கும்படி டி. பியிடம் சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுல் செய்யப்படுவதால் சமாதான நடவடிக்கைகளும், மக்களின் அன்றாட நடவடிக்கைகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதாக பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஊரடங்குச் சட்டம் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. அத்துடன் மக்கள் தங்களுக்கு வேண்டிய அத்தியாவசிய பொருள்களையும் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது சேவைகள், விநியோகங்கள் ஆகியன தடைப்பட்டுள்ளன.

அவசரகால சட்டத்தை பிரகடனம் செய்வதும், ஊரடங்கு சட்டத்தை அமுலுக்கு கொண்டுவருவதும் முற்றிலும் ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவே இருக்கிறது. இதுதான் சட்டம். ஊரடங்கு சட்டத்தை நீக்கும்படி பிரதமர் என்ற முறையில் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

கூடிய விரைவில் தாம் அவ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முப்படைத் தளபதிகளையும் பிரதமர் சந்திரிகா சந்தித்தார்

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க, நேற்று பிரதமர் அலுவலகத்தில் முப்படைத் தளபதிகளையும் பொலிஸ் மா அதிபரையும் சந்தித்தார்.

அலுவலகத்தில் கடமையேற்றதும் முதற்பணியாக இச்சந்திப்பை நடத்திக் கலந்துரையாடியதாக தெரியவருகிறது இச்சந்திப்பின் போது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தையும்உடனிருந்தார்.

இதேவேளை புதிய அமைச்சர்கள் பலரும் தங்கள் கடமைகளை நேற்றுப் பொறுப் பேற்றுக் கொண்டனர்.

# வரி விளம்பரம்

## வெளிவந்துவிட்டது வியாழன் மாற்றம்

PROF. T. சத்தியதாஸன் கணிப்பில். ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீகாந் புத்தகசாலை- நல்லூர். மக்மிலன் புத்தக சாலை, யாழ்ப்பாணம்' இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சிவம் நீதிக்கதைகள் 3 4,5,6 ஆண்டு 5 கணிதம், தமிழ் 94 வினா விடைகள். (சி-10101)

## வேப்பம் விதை

சுத்தமான வேப்பம் விதை, கோது கொள்வனவு செய்கிறோம். அண்ணா கோப்பி கடைகளிலும் கொடுக்கலாம். ''மில்க்வைற்''

(10152)

## வெளிவந்து விட்டது!

ஆண்டு 11 ற்கான துரித மீட்டல் வினாவிடை வெளிவந்து விட்டது. ஆக்கம்:க. சந்திரசேகரம் ஏக விநியோகஸ்தர்கள் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை 235, காங்கேசன் துறை சாலை, யாழ்ப்பாணம்

(9176)

## சாளி விற்பனைக்குண்டு

தனியார் பாவனையிலுள்ள ஹொண்டா சாளி விற்பனைக்குண்டு. பார்வையிட்டு விலை தீர்மானிக்கலாம். 36, பொற்பதிவீதி- கொக்குவில்.(9175)

## தவறிவிட்டது

19.08.94 வெள்ளிக்கிழமை அன்று சைச்சங்கிலி (பவுண்) கல்வியங் காட்டிற்கும் - யாழ் நகரிற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுகாந்திமதி,97 பருத்தித்துறை வீதி கல்வியங் காடு என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(9178)

## 6-ம் கட்ட உணவு முத்திரை

(தொல்புரம்)

இடப்பெயர்ந்தோர்க்கான 6 ஆம் கட்ட நிவாரண உணவு முத்திரை விநியோகிக்கப்படவுள்ளது.

## கண்காட்சி

நல்லூர் கந்தன் உற்சவத்தினை அடுத்து யாழ்ப்பாணம் மாநகர சுகாதாரப் பிரிவினர் சுகாதாரம்சம்பந்தமான கண்காட்சி ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்

நல்லூர் இந்து விடுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ''சுக வாழ்வு'' என்னும் தலைப்பிலான மேற்படி சுகாதாரக் கண்காட்சியினை அநேக மக்கள்கண்டுகளித்துவருகின்றனர்

# தரக்கட்டுப்பாடு நடைமுறை முதலாம் திகதி முதல் அமுல்

எதிர்வரும் 1-ம் திகதி முதல் சகல வர்த்தகர்களும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும்போது கண்டிப்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி அண்மையில் நடைபெற்ற வர்த்தக சங்க செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் சகல வர்த்தக சங்கங்களினதும் செயற்குழு உறுப்பினர்களும்,சமாச செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்தும் முறை. எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டன-

இதில் ஒவ்வொரு உற்பத்தியாளரும் தமது உற்பத்திப் பொருட்களில் உற்பத்தி நிறுவனத்தின் பெயர், விலாசம், உள்ளடக்கிய பொருட்கள், உற்பத்தித்திகதி, காலவதியாகும் திகதி, காலவதியாகிய பொருட்களை விற்பனை நிலையத்தில் வைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் ''விற்பனைக்கல்ல'' என்ற வாசகம் பொதுமக்களுக்கு அறியப்படுத்தப்படல் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது

எனவே இவைகளை மீறும் வர்த்தகர்கள் மீது தமிழீழ சட்ட ஒழுங்குகளுக்கமைய காவல்துறைபால்நடவடிக்கை எடுக்கப்படுமென தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது-

# தென்பகுதி மீண்டும் வழமைக்கு திரும்பியது

## -வவுனியா இரவுரயில் ஓடவில்லை

(கொழும்பு)

அலுவலக வேலைகள், போக்குவரத்து சேவைகள், வங்கிச்சேவைகள், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் தனியார் துறையினரின்சேவைகள் என்பன நேற்று முதல் வழமைக்கு திரும்பியிருப்பதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அலுவலகங்களுக்கான ஊழியர்களின் வருகை திருப்திகரமானதாக இருந்ததாகவும் ரயில்வண்டிச்சேவைகள் அட்டவணைப்படி மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது- பதுளைக்கான இரவு நேர தபால் ரயில் சேவை நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாயினும் வவுனியாவுக்கான இரவுதபால்ரயில்சேவை இன்னமும்மீள ஆரம்பிக்கப்படவில்லை என ரயில்வே கட்டுப்பாட்டு திணைக்களம் கூறியுள்ளது-

கொழும்பு துறைமுகத்திலும் பொருட்களை ஏற்றி இறக்கும் வேலை நேற்று வழமைக்குத் திரும்பியதாக துறைமுக அதிகாரசபை நேற்றுத் தெரிவித்தது- வடமத்திய மாகாணத்தின் அரசாங்க திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் ஊழியர் வருகை திருப்திகரமாகநேற்று இருந்துள்ளது-

# வேலை வாய்ப்பு உருவாக நடவடிக்கை எடுக்கப்படும்

## -சி. வி. குணரத்தினா

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் கைத்தொழில் கொள்கையின் முக்கிய குறிக்கோள் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகும் இவ்வாறுகைத்தொழில்துறை அமைச்சர் சி வி குணரத்தினா தெரிவித்தார்.

நேற்றுக் கர்லை தமது அமைச்சில்கடமைகளைப்பொறுப்பு ஏற்றுக் கொண்ட அவர்அங்கு மேலும் கூறுகையில் திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் மக்களின் சேமநலன்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அதேவேளையில் லஞ்சத்தையும் ஒழுங்கீனங்களையும் ஒழித்துக் கட்டுவது புதிய அரசாங்கத்தின் முக்கிய கடமையாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

# சுயவேலை வாய்ப்பு ஊக்குவிக்க கடன் வசதி

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேசத்தின் தொல்புரம் மத்திப் பகுதியில் சுயவேலை வாய்ப்பு வசதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய சர்வோதயத்தினரால் ஊக்குவிப்புக் கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

தொல்புரம் மத்தி சர்வோதய கிராமோதய சமித்தியின் ஊடாக மேற்படி தேசிய சர்வோதயத்தினரால் வழங்கப்படவுள்ள ஊக்குவிப்பு நிதி அத் கிராமத்தில் வசதி குறை[illegible] ந்த நிலையில் சுயதொழில்களை மேற்கொண்டுவருபவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த மனிதநேய உதவியினால் பல வறிய மக்கள் பயனடைய வாய்ப்பு எட்டியுள்ளதெனவும். இதுவரை இக் கடனுதவி கோரி 25 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் மேற்படி சமித்தியின் பொருளாளர் திரு அ. சுகதேவன் அவர்கள் தெரிவித்துள்ளார்-

# யாவில் குளம் திருத்தம்

வலிகாமம் ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள யாவில் குளம் தற்போது தேச நிர்மாணிகளால் புனரமைக்கப்பட்டு வருகின்றது..

பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்படும் இவ் வேலையானது வட தமிழீழத்தின் பல பகுதிகளிலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் துரிதநீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது

# கல்வி ஊக்குவிப்பிற்கு நடவடிக்கை

தொல்புரம் மத்திய சனசமூக நிலையமும், அதன் தோழமை ஸ்தாபனமான தொல்புரம் மத்தி சர்வோதய கிராமோதய சமித்தியும் இணைந்து சிறுவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளன-

யாழ் தேசிய சர்வோதயத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் மேற்படி சமித்தியும் சனசமூக நிலையமும் மாணவச் செல்வங்களுக்கு கல்வி அறிவினை ஊக்குவிக்கும் பொருட்டு தொல்புரம் மத்தி, மேற்கு, கிழக்கு கிராமப் பிரிவுகளை ஒன்றிணைத்து அங்குள்ள மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரை, கவிதை, மனனம் போன்ற போட்டி நிகழ்வுகளை ஏற்படுத்தி கல்வி அறிவினை மேம்படுத்தவுள்ளனர்- இத்திட்டத்தின் ஆரம்பகட்டமாக மிருகவியல் சம்பந்தமான வீடியோ படக்காட்சி ஒன்று சிறந்தமுறையில் சிறுவர்களுக்கு அண்மையில் காண்பித்து வைக்கப்பட்டது என சமித்தி, சனசமூக நிலையம் ஆகியவற்றின் செயலர் திரு கி. மகேந்திரம் தெரிவித்துள்ளார்

(41)

# கும்பாபிஷேகப் பத்தாண்டுபூர்த்தி

யாழ்/ வண்ணார் பண்ணை கிழக்கு கலட்டி சிறி வீரகத்தி விநாயகர் கோவிலின் குப்பாபிஷேகம் நடைபெற்ற பத்தாவது ஆண்டுப் பூர்த்தி விழா நாளை காலை பத்து மணியளவில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு1001 சங்காபிஷேகமும் திருவூஞ்சல் நிகழ்வும் பூந்தண்டிகை உற்சவமும் இடம் பெறவுள்ளது.


# பதவி வெற்றிடங்கள்

## உள்ளக கணக்காய்வாளர் பதவிகள்-ஆண்கள்

பல்வேறு துறைகளில் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வரும் பிரபலநிறுவனம் ஒன்றிற்கு கணக்காய்வு செய்வதற்கு மேற்படி பதவிக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமை:-

1. க,பொ,த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும், அல்லது
2. கணக்குப் பதிவாளராக அரச/ கூட்டுத்தாபன/


# நினைவு கூருகின்றோம்...

## 23. 08. 1994 .

1984 ஆம் ஆண்டு இதேதினம் தாளையடி வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**நீசன்-குமரிநாடன்** (செல்லத்துரை செல்வநாயகம் - கோவில்குஞ்சுக்குளம், ஓமந்தை-வவுனியா)

1985ஆம் ஆண்டு கிளி - உமையாள்புரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**விவேகன்** (முருகர் சிவனேஸ்வரன் - கண்டாவளை, பரந்தன் - கிளிநொச்சி)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் ஏற்பட்ட தாக்குதலின்போது விழு புண்ணடைந்து தமிழகத்தில் சிகிச்சை பெற்றுவரும்போது வீரச்சாவெய்திய -

**மானா** (செல்லையா சுப்பிரமணியம் - மாசார் - பளை)

யாழ் - ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான -

**தந்தையான** (அடைக்கலமுத்து - உயரப்புலம் - ஆனைக்கோட்டை)

**மகள்** (சோபா அடைக்கலமுத்து - உயரப்புலம் - ஆனைக்கோட்டை)

1990ஆம் ஆண்டு மங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சத்தியா-சித்நியா** ( --- )

ஊர்காவற்றுறையில் 2-வது தடவையாக உலங்கு வானூர்தி மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பிரதீஸ்-பிரதீப்** (வன்னியசிங்கம் வரேந்திரன் - வந்தாறுமூலை, செங்கலடி - மட்டு)

**விக்னா** (சித்திரவேல் சசிகரன் - 2-ம் கொலனி, கந்தளாய் - திருமலை)

**பாபுஜி** (ஐயாத்துரை அருட்செல்வன் சந்தை வீதி, காங்கேசன்துறை)

**2-ம் லெப். சின்னஅல்பேட்** (சடாட்சரம் தனேஸ்வரன் - கஸ்தூரியார் வீதி - யாழ்)

காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**சீலன்** (நல்லதம்பி சசிகரன் - மண்டைதீவு)

காரைநகரில் எதிர்பாராதவிதமாக பொறிவெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த -

**சாந்தன்** (அமிர்தநாதன் ஜோண்தோமஸ் - 8-ம் வட்டாரம் - நெடுந்தீவு மத்தி)

1991ஆம் ஆண்டு மட்டு - மியாங்குளம் பகுதியிற் சுகயீனம் காரணமாக எமைப்பிரிந்த -

**சுது** (பிரகாசம் ரஞ்சன் - ஊறணி, பொத்துவில் - அம்பாறை)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சவெய்திய -

**லெப். தர்மன் ரவி** (இராசதுரை ரவீந்திரகுமார் - மகான் வீதி, கோப்பாய் வடக்கு -யாழ்)

1993ஆம் ஆண்டு மட்டு - புலுட்மோனோடை, காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப் ஜெயக்குமார்** (நாகேந்திரன் ராஜா - கொடுவாமடு - மட்டு)

**2-ம் லெப். கலாபன்** (மாணிக்கவாசகம் சுதாகரன்- மெயின் வீதி, களுவாஞ்சிக்குடி - மட்டு)

(தொல்புரம்)

இடப்பெயர்ந்தோர்க்கான 6 ஆம் கட்ட நிவாரண உணவு முத்திரை விநியோகிக்கப்படவுள்ளது.

காரைநகர் மத்தி யே/48 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த இடம் பெயர்ந்தவர்களுக்கான மேற்படி உணவு முத்திரைகள் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி முன்பாகவுள்ள காரைமத்தி கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து 24 ஆம் திகதி புதன் கிழமை சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வதிபவர்களுக்கும், 25 ஆம் திகதி வியாழன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வதிபவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது. (41)

தய கிராமோதய சமித்தியின் ஊடாக மேற்படி தேசிய சர்வோதயத்தினரால் வழங்கப்படவுள்ள ஊக்குவிப்பு நிதி அக் கிராமத்தில் வசதி குறை தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் மேற்படி சமித்தியின் பொருளாளர் திரு அ. சுகதேவன் அவர்கள் தெரிவித்துள்ளார்- (41)


## ஜெயா அழகுமாடம்

விற்பனை அகமும், காட்சி அகமும்,
நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வடக்கு வீதியில் அமைந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகின்றோம்.

(சி-10158)



1. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும், அல்லது
2. கணக்குப் பதிவாளராக அரச/ கூட்டுத்தாபன/ தனியார் நிறுவனங்களில் கடமை புரிந்தவர்கள் அல்லது
3. அரசாங்க / கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் கணக்காய்வாளராக கடமை புரிந்து இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம்,

**விண்ணப்ப முடிவு திகதி: 31-08-1994**

விளம்பர இலக்கம்:-346
மேற்பார்த்து ஈழநாதம்,
யாழ்ப்பாணம்

(சி-10164)



கொடுவாமடு - மட்டு)

**2-ம் லெப். கலாபன்** (மாணிக்கவாசகம் சுதாகரன்- மெயின் வீதி, களுவாஞ்சிக்குடி - மட்டு)

**சகலன்** (சாமித்தம்பி விஜிதரன் - மகிளூர்முனை - களுவாஞ்சிக்குடி - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்-

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10162)



# சேரன் பல்பொருள் வாணிபம்

**23-8-94** நெல்லியடி கிளை ஒன்றின்
முதலாம் வருட நிறைவு

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் அன்பான நன்றி

பருத்தித்துறை வாடிக்கையாளர்களுக்கோர்
மகிழ்வான செய்தி!

உங்கள் நன்மை கருதி புதிய கிளை!

**பிரதான வீதி, பருத்தித்துறை**

( மரக்கறிச் சந்தைக்கருகாமையில் )

வாருங்கள்! வாங்குங்கள்!! நிறைவடையுங்கள்!!!

## சேரனின் எழிற் கூடம்!

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு
நல்லூர் வீதியில்

**சிறப்புக்கடை**

தரமான பொருட்கள்!
மலிவான விலையில்!

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

(சி-10163)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு; நீண்டு செல்லும் விசாரணைகள்

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவுற்ற நிலையிலும், அக்கொலை வழக்கு தொடர்பான முறையான விசாரணை இன்னமும் இழுபறியாகிக் கொண்டிருக்கிறது.

ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணைகள் நடந்து வரும் முறையைப் பார்த்தால் அவை வெறும் கண்துடைப்புக்காக மேற் கொள்ளப் பட்டுவரும் விசாரணைகளோ என்றே எண்ணத் தோன்றுகிறது. இப்போது அவ் வழக்கில் புதிதாகவெரு கருத்து முன் வைக்கப்பட்டிருக்கிறது. ராஜீவைக் கொன்றது ஈழப் புலிகள் தன் என்பது வெறும் ஊகத்தின் அடிப்படையிலான குற்றச்சாட்டே தவிர ஆதார பூர்வமான குற்றச்சாட்டாக அமைய வில்லை என்பதுதான் அக்கருத்து இக்கருத்தைச் சொல்லியிருப்பவரும்யாரோ அல்ல- அவர் நீதிமன்ற பிரபல வழக்கறிஞர் பி. எல். வதேரா தான். அவர் புதுடில்லியில் ஜெயின் கமிஷனிடம் இதனை தமது நாற்பது பக்க சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

ராஜீவ் கொலை தொடர்பான கிரிமினல் வழக்கு சென்னை அருகே பூந்தமல்லியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. அங்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்காக வாதாட அரசு நியமித்துள்ள வழக்கறிஞர்கள், அரச தரப்பு வழக்கறிஞர்களுக்கு தினமும் எவ்வளவு சம்பளம் தரப்படுகின்றதோ, அந்தளவிற்கு தங்களுக்கும் அரசு சம்பளம் தரவேண்டும் என்று கேட்டு ஆர்ப்பாட்டம் செய்து வந்ததால் விசாரணை தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தது அவர்களின் கோரிக்கையை முழு அளவில் இல்லாவிட்டாலும், ஓரளவு ஏற்றுக் கொண்டதால் ஆர்ப்பாட்டம் கைவிடப் பெற்று செவ்வாய்க்கிழமை ஆகஸ்ட் 16) முதல் விசாரணை தொடர்ந்து நடக்க ஏற்பாடாகி உள்ளது.

இதேவேளையில், ராஜீவ் கொலை தொடர்பாக புதுடில்லியில் ஜெயின் கமிஷனும் கே. எஸ். வர்மா கமிஷனும், விசாரணை நடத்திக் கொண்டிருக்கின்றன ராஜீவ் கொலையில் அரசியல் பின்னணி உண்டா என்பதை வர்மா கமிஷனும் ராஜீவிற்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பில் குறைபாடுகள் இருந்தனவா என்பதை ஜெயின் கமிஷனும் விசாரித்துக் கொண்டிருக்கின்றன அந்த விசாரணைகள் ஏதோ கண்துடைப்பிற்காக நடத்தப்பட்டு வரும் விசாரணைகளைப் போலவே உள்ளன என்று பலரும் கருதுகிறார்கள்.

இப்பொழுது ஜெயின் கமிஷன் விசாரணைதான் ஓரளவு சூடுபிடித்து வருகிறது "வர்மாகமிஷன் விசாரணை வரம்புக்குட்பட்ட அம்சங்களை ஜெயின் கமிஷன் விசாரிக்கக் கூடாது" என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கமிஷனிடம் சொல்லப் போக கமிஷன் தலைவரான ஜெயின் எதை விசாரிக்க வேண்டும் என்று எங்களுக்குச் சொல்லித்தரத் தேவையில்லை என்று தி.மு.க.விற்கு 'சூடு' கொடுத்தார்.

அந்தச் சூட்டோடு சூடாக காங்கிரஸ்காரர்கள் புதிய பிரச்சினை ஒன்றை கமிஷன் விசாரணையின் போது கிளப்பியுள்ளனர். ராஜீவ் காந்திக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில் குளறுபடிகள் இருந்ததற்கு அன்றைய பிரதமர் வி.பி. சிங்தான் காரணம் எனவே அவரை அழைத்து கமிஷன் விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதே வேளையில் புதுடில்லியில் மாநிலங்களவை இ. காங்கிரஸ் உறுப்பினராக இருக்கும் எஸ் எஸ் அலுவாலியா என்பவர் இன்னும் ஒரு படி மேலேயே பேசி "ராஜீவ் காந்திக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில் குளறுபடிகள் ஏற்பட்டதற்கு வி. பி. சிங் மட்டுமல்ல அன்றைய குடியரசுத் தலைவர் ஆர் வெங்கட்ராமனும்தான் காரணம் எனவே அவர்கள் இருவர் மீதும் கிரிமினல் வழக்கு தொடர வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் தமிழக அரசு போதிய ஒத்துழைப்பு தருவதில்லை என்றுமற்றொரு காங்கிரஸ் உறுப்பினரும் புகார் செய்தார்.

விஷயம் இவ்வாறு வேறு இடங்களில் சூடாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்ததேயொழிய கமிஷன் விசாரணைகளிலும் வழக்கு விசாரணையிலும் எந்த பரபரப்பும் தலைகாட்டவில்லை அந்தக் குறையை போக்குவது போல வழக்கறிஞர் வதேரா புதுப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பியிருக்கிறார். அவர் சொன்னார் "ராஜீவ் கொலைக்கு யார் காரணம் என்பது திட்டவட்டமாக தெரியவில்லை எதுவும் ஆதார பூர்வமாக தெரிவிக்கப்படவில்லை. விடுதலைப்புலிகள் தான் இதைச் செய்தார்கள் என்பது வெறும் ஊகம்தான் அதை நம்புவதும் மனித குண்டு ஒன்றின் மூலம் ராஜீவ் கொலை செய்யப்பட்டார் என்று நம்புவதும் கஷ்டமாக உள்ளது.

கொலை நடந்த இடத்திற்கு புலனாய்வுத் துறையினரும் தடய அறிவியல் வல்லுநர்களும் சென்றிருந்த போது சம்பவம் நடந்த இடத்தில் கிழிந்த துணியுடன் சில வயர் துண்டுகளும் பட்டரியும், கண்டெடுத்திருக்கிறார்கள்- அங்கு சிதறிக்கிடந்த ஒரு பெண்ணின் சடலத்திலும் அதேமாதிரி துணித் துண்டுகள் ஒட்டிக்கிடந்ததை வைத்துக் கொண்டு அந்தப் பெண் தான் தன் உடலில் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு வந்து அதனை வெடிக்கச் செய்து ராஜீவ் காந்தியைக் கொன்று விட்டாள் என்ற முடிவுக்கு வந்து விட்டனர்- தமிழ் நாட்டில் புலிகள் நடமாட்டத்தை தெரிந்து வைத்துக் கொண்டு ராஜீவ் காந்தியை தீர்த்துக் கட்ட விரும்பிய "வேறு யாரோ சிலர்" இப்படு கொலையைச் செய்திருக்கலாம் ராஜீவ் காந்தி பல பயங்கரவாத அமைப்புக்களின் படுகொலைப் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்.

இப்படி பல்வேறு அம்சங்களை தெளிவுபடுத்திக் கொள்ள முன்னாள் குடியரசுத் தலைவர்களான ஜெயில் சிங், வெங்கட்ராமன், முன்னாள் பிரதமர் சந்திரசேகர், முன்னாள் மத்திய மந்திரிகள் சிதம்பரம், மரகதம் சந்திரசேகர், எஸ். பி சவான் மற்றும் ஆர். கே. தவன், டி. என். சேஷன் முதலான 25க்கும் மேற்பட்ட பிரமுகர்களை ஜெயின் கமிஷன் அழைத்து விசாரிக்க வேண்டும். அப்பொழுதுதான் ராஜீவ்கொலையின் மர்மம் துலங்கும்."

வழக்கறிஞர் வதேரா இப்படி ஒரு புதிய கோணத்தில் ஒரு 40 பக்க பிரமாண வாக்குமூலம் கொடுத்திருப்பதால் அதற்கு எங்கிருந்து எப்படி பதிலடி வந்து சேரும் என்று தெரியவில்லை. என்றாலும் ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைகளைமுடுக்கிவிட்டு விரைவில் அவற்றை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருவதால் அடுத்துவரும் நாள்களில் ராஜீவ் கொலை வழக்கு விசாரணைகள் புதிய திருப்பம் பெறலாம் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

நன்றி வீரகேசரி

# இந்தியாவுடன் நல்லுறவு பேணப்படும் புதிய வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆசியப் பிராந்திய விவகாரங்களுக்கு அதிகம் முன்னுரிமை அளிக்கும். சகல நாடுகளுடனும் நல்லுறவைப்பேணுதல் அதன் கொள்கையாக இருக்கும். இவ்வாறு வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளார். கடந்த சனிக்கிழமையன்று அமைச்சு அதிகாரிகளிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை வெளிநாட்டு சேவையில் விசேட தொழில் திறமை பெற்றவர்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்படும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை கொழும்பில் வகுக்கப்பட்டு, வெளிநாடுகளிலுள்ள தூதுவரகங்கள் மூலம் அமுல்செய்யப்படும் அயல் நாடான இந்தியாவுடன் நல்லுறவு வளர்த்துக் கொள்ளப்படும்.

அணிசேராக்கொள்கையின் அடிப்படையில், சகல நாடுகளுடனும் தொடர்புகள் வலுப்படுத்தப்படும். மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட சகல சர்வதேச உடன்படிக்கைகளிலும் அரசாங்கம் கைச்சாத்திடும் எனவும் குறிப்பிட்டார்.

# சுதந்திரமாக நீதியாக தேர்தல் நடைபெற்றது

## -அவதானிகள் குழு அறிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் அது நடத்தப்பட்ட சூழ்நிலையையும், அரசியல் நிலையையும் கருத்திற் கொண்டு பார்க்கும் [illegible]

கையில், தாங்கள் சுமார் எண்ணூறு வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரில் சென்றதாகவும், கண்டவைகள் பற்றி நேரில் சான்று பகர முடியும் எனவும் மேலும் [illegible]

தல்களைப் போலவே அரசாங்கக் கட்சியே, வசதிகளைப் பொறுத்த மட்டில் சாதகமான நிலையில் இருந்தது. வானொலி, தொலைக் காட்சிச் சாதனங்கள் மற் [illegible]

## ஒய்வூதிய திட்டம் அறிமுக விழா

(தொல்புரம்)

கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன் புரித்திட்டத்தில் காரைநகர் கடற்றொழிலாளர்கள் இணைந்து கொள்ளும் முகமாக ஓய்வூதிய திட்ட அறிமுக விழா வைபவரீதியாக அண்மையில் தொல்புரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

காரைநகர் கடற்றொழிலாளர் சங்கங்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி ஓய்வூதியத் திட்ட ஆரம்ப விழா தொல்புரம் மேற்கில் உள்ள ஒன்றியப் பணிமனையில் ஒன்றியத்தின் தலைவர் திரு க, கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வினை யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு எஸ்.ஏ. யோசப் அவர்கள் ஆரம்பித்து வைத்தார் இத்திட்டத்தில் ஆரம்பக் கட்டமாக சுமார் 25பேர் வரை இணைந்து கொண்டனர் மேலும் பலர் இத்திட்டத்தில் இணைவதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர் என ஊர்காவற்றுறை பிரிவு கடற்றொழில் பரிசோதகர் திரு சோ. விக்கினேஸ்வரன் தெரி [illegible]

# இலங்கைக்கான உதவிகள் இராணுவத்திற்கு பயன்படலாகாது

## - அ. சா. நிறுவனங்கள் நிபந்தனை

(கொழும்பு)

சர்வதேச நாடுகளின் அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் இலங்கை அரசின் ஊடாக வழங்கும் உதவிகள் இராணுவத்திற்கு பயன் படக்கூடாது என நிபந்தனை விதித்துள்ளன எனத் தெரியவருகின்றது

போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களிற்கு புனர்வாழ்வு அளிப்பதற்கும் போரினால் பாதிக் கப்பட்டு ஊனமுற்ற பொதுமக்களிற்கு செயற்கை அவயவங்களை பொருத்தும் நோக்கத்திற்காகவுமே தாம் உதவிகளை வழங்குவதாகவும் இலங்கை அரசு போரினால் காயமடைந்த படையினரிற்கு புனர் வாழ்வளிப்பதற்கும் ஊனமுற்ற படையினரிற்கு செயற்கை அவயவங்களை பொருத்துவதற்காகவும் இவ் உதவியை பயன்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்தது. இவ்வேளை இந் நிபந்தனையை சர்வதேச நாடுகளின் அரச சார்பற்ற நிறுவனங்கள்விதித்துள்ளது அரசிற்கு மேலும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் ஹோமகம இராணுவ முகாமில் ஊனமுற்ற படையினரிற்கு செயற்கை அவயவங்களைப் பொருத்தும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (88)

# ஏசியா பவுண்டேசனின் புதிய பிரதிநிதி நியமனம்

(கொழும்பு)

ஏசியா பவுண்டேசன் அமைப்பின் கொழும்புக்கான புதிய பிரதிநிதியாக எட்வர்ட் எச் அன்டர்சன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்திலுள்ள ஏசியா பவுண்டேசன் அமைப்பின் இணைப்புப் பிரதிநிதியாக பணியாற்றிய அன்டர்சன் அண்மையில் தமது புதிய கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

தாய்லாந்து அரசில் கைத்தொழில்துறை அமைச்சிலும் இந்தோனேஷியாவில் அமெரிக்க சமாதானப் பிரிவிலும் பணிபுரிந்த அன்டர்சன் டெக்ஸாஸ் பல்கலைக்கழக தொல்பொருளியல்துறை பட்டதாரியுமாவார்.

சான் பிரான்சிஸ்கோவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ஏசியா பவுண்டேசன் ஆசிய பசுபிக் பிராந்தியங்களில் 13 அலுவலகங்களைக் கொண்டுள்ளது. 1954-ல் [illegible]

யாழ். தபால் அலுவலகங்களில்

## றிசீட் புத்தகம் இன்மையால் [illegible]

அரசியல் நிலைமையும் கருத்திற் கொண்டு பார்க்கும் போது சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற்றதாகவே கருத வேண்டும். இவ்வாறு பொதுத் தேர்தலை கண்காணிக்க வந்த சர்வதேச அவதானிகள் குழு கருத்து வெளியிட்டுள்ளது.

அக் குழுவின் அறிக்கை மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம், வன்னி தவிர்ந்த இருபது தேர்தல் மாவட்டங்களிலும் சராசரியாக எண்பது சதவிகிதமானோர் வாக்களித்துள்ளனர். இத்தகைய உயர்ந்த வாக்களிப்பு விகிதம் பேணப்பட்டமைக்காக இலங்கையின் வாக்காளர்கள் பாராட்டப்பட வேண்டியவர் ளாவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவதானிகள் குழுவில் அவுஸ்திரேலியா, இந்தியா, பங்களாதேஷ், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, மலேசியா, கயானா, பாகிஸ்தான் அமெரிக்கா ஆகிய நாடுகளையும் சர்வதேச நியாயவாதிகள் ஆணைக்குழுவையும் சேர்ந்த 44 பிரதிநிதிகள் பங்கு கொண்டது தெரிந்ததே.

வெள்ளிக்கிழமையன்று தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்ட இவ் அறிக்

பற்றி நேரில் சான்று பகர முடியும் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அரசாங்க வாகனங்கள் அதிகாரமற்ற வர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை, வாக்களிப்பு நிலையங்களில் ஆள் மாறாட்டம், வாக்களிப்பு தினத்தன்று இடம்பெற்ற பயமுறுத்தல்கள் என்பன தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. எனினும் அவை பொதுவான தேர்தல் முடிவுகளில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்தியிருக்க மாட்டாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் முன்னைய தேர்

தது. வானொலி, தொலைக் காட்சிச் சாதனங்கள் மற்றும் லேக் ஹவுஸ் பத்திரிகைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தமை இதற்கு காரணமாகும். சுவரொட்டிகள் சம்பந்தமான சட்டம் பெருமளவில் மீறப்பட்டுள்ளது, இந்தச் சட்டத்தை அமுல் செய்வது கடினம் என்பதால் இது மறு பரிசிலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும், நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை அவதானிகள் வலியுறுத்தியுள்ளனர்.

றொழில் பரிசோதகர் திரு சோ. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார் (41)

## உலர் உணவு விநியோகம்

(தொல்புரம்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணம் விநியோகிக்கப்படவுள்ளது.

நடப்பு வருடம் ஆடி மாத முதல் இருவாரங்களுக்குமான இலவச நிவாரண விநியோகத்தினை காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் மேற்கொள்ளவுள்ளனர் அரிசி, மா, சீனி, கடலைப் பருப்பு, மைசூர் பருப்பு, தேயிலை, முழு ஆடைப் பால்மா, சவர்க்காரம்,போன்ற அத்தியாவசியப்பொருட்களை விநியோகிக்கவுள்ளனர். (41)

## உப்புக்கான சுங்கத் தீர்வை 50 சதவிகிதத்தால் குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உப்பிற்கான சுங்கத்தீர்வை ஐம்பது சதவிகிதத்தால் குறைக்கப்பட்டுள்ளது நாட்டில் உப்புக்கு தட்டுப்பாடு நிலவுவதால் 45 சதவிகிதமாக இருந்த இறக்குமதி உப்புக்கான சுங்கத் தீர்வை இருபத்து இரண்டரை சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது என சுங்கத்திணைக்களம் அறிவித்துள்ளது.

## விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

சுழிபுரம் பொதுச்சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுவரும் அத்தியாவசியப் பணிகளில் ஒன்றான வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றுதல் மேலும் சில இடங்களில் நிகழவுள்ளன-

எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை காலை முதல் மாலை வரை குறிப்பிட்ட நேரங்களில் சுழிபுரப் பகுதிகளின் சில பிரதான இடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் இதன் பிரகாரம் சத்தியக்காடு சந்தை, வழக்கம்பரை அம்மன்கோவிலடி, சுழிபுரம் சந்தி காளுவன் பாலர் பாடசாலை, சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையம், பெரியபுலோ வைரவர் கோவிலடி ஆகியனவற்றில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் (41)

## பாவனைக்கு உதவாத தேயிலை கூ. சங்கங்களினால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்திற்கு பாவனைக்கு உதவாத தேயிலையை வழங்கி வருவதாக பாவனையாளர் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதுஇடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரை 16 'பி' க்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களில் ஒன்றாகவே இத்தேயிலையும் வழங்கப்படுகிறது பண்டத்தரிப்பு, அளவெட்டி சங்கங்களில் விநியோகிக்கப்படும் இத்தேயிலையில், தேயிலைக்குரிய தன்மை எதுவுமே காணப்படவில்லை எனவும் பாவனையாளர் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து ஒருவர் கருத்து தெரிவிக்கையில், கூடுதலான பொருட்களை வழங்குவதாக காட்டும்நோக்குடனா இந்த தேயிலையும் வழங்கப்படுகிறது. இதில் பார்க்க இந்தத் தேயிலையை விநியோகிக்காது மற்றைய பொருட்களை வழங்கலாமே என்றார்.

## றிசீட் புத்தகம் இன்மையால் பரீட்சார்த்திகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாத க. பொ. த (சாதாரணதர) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் யாழ் மாவட்ட பரீட்சார்த்திகள் தபாற்கந்தோரில் பற்றுச்சீட்டு புத்தகங்கள் இல்லாமையினால் விண்ணப்பிக்க சிரமப்படும் நிலை தோன்றியிருக்கிறது,

இதற்கான பற்றுச் சீட்டு புத்தகங்களில் 500 அனுப்பி வைக்கும்படி கோரப்பட்ட போதிலும் 19 புத்தகங்கள் மட்டுமே அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது என்று யாழ்ப்பாண பிரதம தபாற்கந்தோர் அதிகாரிகள் கூறியுள்ளனர்

இதனால் பரீட்சார்த்திகள் பலரும் தபாற்கந்தோர்களுக்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர்.

ளில் 13 அலுவலகங்களைக் கொண்டுள்ளது. 1954-ல் உருவாக்கப்பட்ட இந்த அமையம்இன்றுஅரசாங்கமற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கு வருடாந்தம் 1500 ற்கும் மேற்பட்ட நன்கொடைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பதுளை கோவில்களுக்கு காசோலைகள் அன்பளிப்பு

### தேர்தலுக்கு முன் நடவடிக்கை

(கொழும்பு)

பதுளை மாவட்டத்தில் இருக்கும் பெருந் தோட்டங்களில் இருக்கும் கோவில்களுக்கு தேர்தலுக்கு முந்திய வாரத்தின் இறுதி நாட்களில் சென்ற ஒரு கோஷ்டியினர் பெரும் தொகைகளை குறிப்பிட்டு காசோலைகள் வழங்கியிருக்கின்றனர்-

தோட்டங்களிலுள்ள ஆலயங்களின் நிர்வாகிகளையும், தோட்டக் கமிட்டி தலைவர்களையும் அழைத்து இக் காசோலைகள் வழங்கப்பட்டன- 5000 ரூபா முதல் 10.000 ரூபா வரை பெறுமதி குறிக்கப்பட்ட இக் காசோலைகள் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன பதுளை கீனாகல தோட்டத்தில் மட்டும் ரூபா 30,000க்கு இத்தகைய காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன- எனினும் இக் காசோலைகள் உண்மையானவையா? அல்லது செல்லுபடியாக்க கூடியவைதானா என்பதை தெரிந்து கொள்வதற்காக தொழிற் சங்க அலுவலகங்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் திரண்டு சென்றனர்-

மாகாண சபைகளுக்கு

## அரசியலமைப்பின் கீழ் அதிகாரம் வழங்கப்படும்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 வது திருத்தத்திற்கு அமைவாக மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்றும், பிரதேச சபைகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படும் முறை மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் கூட்டுறவு மற்றும் மாகாண சபைகளுக்கான அமைச்சர் அமரசிறி தொடங்கொட கூறியுள்ளார்.

காலியிலுள்ள சிறி மினுவாங்கொட பௌத்த நிலையத்தில் வெகுஜனத் தொடர்பு பிரதிநிதிகள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், மொத்த விற்பனை வரியிலிருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்றும், எரிபொருள், சீமெந்து, மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விநியோக முகவர்களாக கூட்டுறவு சங்கங்கள் செயற்பட வாய்ப்பு அளிக்கப் படுவதன் மூலம் அவற்றின் லாபம் அதிகரிக்கச் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களை மீண்டும் ஒருங்கிணைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## மாத முடிவுக்கு முன் நிவாரணம் பெறவும்

நடப்பு ஆண்டின் ஆடி மாத முதல் இருவாரங்களுக்கான இடம்பெயர்ந்தவர்களின் இலவச நிவாரணப் பொருட்களைஇந்தமாத முடிவிற்குள் விநியோகிப்பதற்கு துரித ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

காரைநகர் பலநோக்குகூட்டுறவுச்சங்கத்தின் சகல கிளைகளிலும் வருடாந்த எண்பார்வை கணக்குகள் இந்த மாத கடைசியில் நடைபெற இருப்பதால் நிவாரணப் பொருட்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கத்தினர் மக்களைக் கேட்டுள்ளனர். (41)

## லேக்ஹவுஸ் நிறுவனம் தனியார் துறையினரிடம்

(கொழும்பு)

தேர்தல் வாக்குறுதிப்படி இதுவரை அரச கட்டுப்பாட்டிலிருந்த லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் தனியார் மயமாக்கப்படும் என புதிய தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

மிகப்பெரிய பதிப்பீட்டு நிறுவனமாக இலங்கையில் விளங்கும் இந்நிறுவனத்தின் பங்குகள் தனியாருக்கு விற்கப்படும் என்றார். எனினும் இது எப்போது நடைபெறும் என அவர் கூறவில்லை. இந்நிறுவன ஊழியர்கள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர் நியமனம்

(கல்முனை)

கல்முனைக் கல்விக் கோட்டத்திலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் சிங்கள கற்பிப்பதற்கென ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வடக்கு-கிழக்குமாகாண கல்வித் திணைக்களம் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இவர்களுக்கு மாதாந்தம் 1500 ரூபா அலவன்சாக வழங்கப்படுமென்றும், கடமைக்கு செல்லாத நாட்களிற்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது என்றும், நியமனக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இவர்கள் நிரந்தர நியமனம் கோர முடியாது எனவும், நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது- பரீட்சார்த்தமாக இரண்டு பாடசாலைகளில் மட்டும் கடமையாற்றும்படி- இவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது-

## தந்தையின் உருவச்சிலைக்கு சந்திரிகா மலரஞ்சலி

(கொழும்பு)

பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஹொரகொல்லையிலுள்ள தமது தந்தையாரும், முன்னாள் பிரதமருமான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்துஅஞ்சலி செலுத்தினார் அதன்பின்னர் அத்தனகலராஜ மகாவிகாரையில் நடைபெற்ற சமய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

## இனம் தெரியாதோரால் இளைஞர் கொலை

(வவுனியா)

வவுனியா கூடமாங்குளம் சந்தியில் கடந்த ஞாயிறு இரவு 8 30 மணியளவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் உக்குளங்குளத்தைச் சேர்ந்த 21 வயதுடைய சந்திரகுலசிங்கம் என்னும் வாலிபர் கொல்லப்பட்டார்

தெற்கு இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த சிவஞானம் என்பவர் காயமடைந்துள்ளார்- இறந்த சந்திரகுல சிங்கத்தின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இக்கொலை குறித்து வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திறந்த பொருளாதாரத்தில் மாற்றம் எதுவுமிருக்காது

**- வர்த்தக பிரமுகர்கள்**

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியை அமைத்திருக்கும் போதும், அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் தற்போதைய

17வருடங்களுக்குப்பின்னர் ஐ.தே.க தனது ஆட்சி அதிகாரத்தை இழந்திருக்கும் போதும், ஐ.தே.க ஆட்சி கடைப்பிடித்து வந்த திறந்த பொருளாதாரக் கொள்கை

# விகிதாசார தேர்தல் முறை மிகவும் சாபக்கேடானது

**-முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்**

அம்பாறை மாவட்டத்தில் ஒரு தொகுதியிலாவதுவெற்றி பெறாத மூன்று ஆசனங்களும், மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்ற முஸ்லிம் காங்கிரசுக்கு இரு ஆசனங்களும் கிடைத்துள்ளன. இதுதான் விகிதாசாரபிரதிநிதித்துவத்தினதும், போனஸ் ஆசனமுறையினதும் சாபக்கேடு ஆகும். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரமுகர் எம். எம். அபுல் கலாம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அம்பாறை மாவட்டத்தில் ஐ. தே. கவிற்கு வாக்களித்த முஸ்லிம்களும், தமிழர்களும் தத்தமது சமூகத்தின் ஒவ்வொரு பிரதிநிதித்துவத்தை பேரினவாதிகளுக்கு பலியிட்டு துரோகம் இழைத்துவிட்டனர் எனவும் குறிப்பிட்டார்.

## பயிற்சியாளர்கள் 63 பேர் நியமனம்

(பருத்தித்துறை)

கொள்கை திட்டமிடல் அமைச்சு யாழ். ம வட்டத்திற்கு 63 பயிற்சி அபிவிருத்தித் திட்ட உதவியாளர்களை (பட்டதாரி பயிலுனர்கள்) நியமித்து அனுப்பியுள்ளது. யாழ். செயலகத்திற்கு 05 பேரும் வேலணை பிரதேச செயலகத்திற்கு 03 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு 04 பேரும், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு 02 பேரும், மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு 04 பேரும், உடுவில், கரவெட்டி, சண்டிலிப்பாய், கோப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி, நல்லூர், சங்கானை, பிரதேச செயலகங்களுக்கு தலா 5பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அந்தந்த அலுவலகங்களில் பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர், யழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகரின் பணிப்புரைகளையடுத்து இப்பயிற்சி அபிவிருத்தித் திட்ட உதவியாளர்களுக்கான விரிவான வழிகாட்டுதல்களை கொள்கைதிட்டமிடல் செயல்படுத்தல் அமைச்சின் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் பிரதேச செயலகங்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். இப்பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக் கால கொடுப்பனவாக மாதமொன்றுக்கு 2500 ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## 19 வது ஆண்டு நிறைவும் விளையாட்டுவிழாவும்

(பருத்தித்துறை)

புலோலி மந்திகை கம்பன் கழக சனசமூக நிலைய 19-வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் நிலைய மைதானத்தில் தலைவர் திரு ந. ஸ்ரீகரன் தலைமையில் நடைபெற்றது.

## தேர்தல் தினத்தன்று கல்வீச்சும் அசிட்வீச்சும்

(கொழும்பு)

தேர்தல் தினத்தன்று இரு கட்சிகளைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டியினரிடையே ஏற்பட்ட மோதலின் விளைவாக இளைஞர் ஒருவர் கல்வீச்சுக் காயங்களுக்கு இலக்கானார். இவ்வாறு காயமுற்றவர் காலி சாரப்பிட்டிய அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இந்தச் சம்பவம் வெலிகம தேனுவல என்ற இடத்தில் இடம் பெற்றதாக அஹங்கம பொலிசார் கூறியுள்ளனர்.

இதேவேளை அஹங்கம நிலான்ன வலிஹேன பகுதியில் ஏற்பட்ட ஒரு கோஷ்டி மோதலில் அசிட்திராவகம் வீசப்பட்டதால் மூன்று இளைஞர் எரிகாயங்களுக்கு இலக்காகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் அதிகாரி சாவடியில் மாரடைப்பால் மரணம்

வாக்குச் சாவடியொன்றில் தேர்தல் அதிகாரியாக கடமையாற்றிய தேர்தல் அதிகாரி ஒருவர் அங்கு மாரடைப்பால் திடீரென மரணமானார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரகெட்டிய புதியாகர என்ற இடத்தில் வாக்குச் சாவடியில் கடமையாற்றிய பிலியந்தலையைச் சேர்ந்த ரத்நாயக்க (50 வயது) என்பவரே இறந்தவராவார். தனது கடமைகளை முடித்து விட்டு, வாக்குப் பெட்டிகளில் முத்திரையும் இட்ட பின்பு எனது வேலை முடிந்துவிட்டது எனக் கூறிய அடுத்த நிமிடமே அவர் மாரடைப்புக்கு இலக்கானார் என்பது குறிப்பிடத்தக்கது

## பொ. ஐ.மு. விற்கு 38,87,799, ஐ.தே.கவிற்கு 34,98,172

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு முப்பத்தியெட்டு லட்சத்து எண்பத்தியேழு ஆயிரத்து எழுநூற்றி தொண்ணூற்று ஒன்பது பேர் வாக்களித்துள்ளனர். இவ்வாறு தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது- இத் தேர்தலில் ஐ தே. கவுக்கு முப்பத்து நான்கு லட்சத்து தொண்ணூற்று எட்டு ஆயிரத்து நூற்றிஎழுபத்தியிரண்டு வாக்குகளும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு 1,40,944 வாக்குகளும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 1,32,432 வாக்குகளும், சிறிலங்கா முற்போக்கு முன்னணிக்கு 90,078 வாக்குகளும் மகாஜன எக்சத் பெரமுனவுக்கு 68,538 வாக்குகளும், தமிழீழ விடுதலை இயக்கத்திற்கு 26,081 வாக்குகளும் புளொட்டிற்கு 15,567 வாக்குகளும், ஈ பி ஆர் எல்.எப்பிற்கு 9,132 வாக்குகளும், நவ சமசமாஜக் கட்சிக்கு 2094 வாக்குகளும், ஜனநாயக தொழிலாளர் காங்கிரசுக்கு 589 வாக்குகளும்கிடைத்துள்ளன.

## முஸ்லிம்கள் யாழ் வந்ததும்

## ரோகணவின் குடும்பத்தை விடுதலை செய்ய யோசனை

(கொழும்பு

ஜே. வி பி. தலைவர் ரோகண விஜேவீராவின் மனைவியையும், குடும்பத்தினரையும் விடுதலை செய்வது குறித்து ஆராய்ந்து வருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜே. வி பியின் தலைவர் ரோகண விஜேவீரா கொல்லப்பட்ட பின்னர் அவரது மனைவியும், குழந்தைகளும் திருமலை கடற்படை முகாமில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## காலி அரசாங்கசெயலகத்தில் பத்திரிகையாளர் அவமதிப்பு

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் குறித்து செய்தி சேகரிப்பதற்காக சென்ற பத்திரிகையாளர்கள் காலி அரசாங்க செயலகத்தில் அதிகாரிகளால் அவமதிக்கப்பட்டனர்.

பத்திரிகையாளர்கள்பத்துப் பேருக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்ட போதும், நான்கு உடைந்து அமரமுடியாத நிலையிலிருந்த கதிரைகள் கொண்ட ஒரு அறையே பத்திரிகையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது அத்துடன் வழமையாகசெய்து கொடுக்கப்படும் வசதிகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதும், தொலைபேசி வசதிகூட வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனையிட்டு காலி பத்திரிகையாளர் சங்கம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## சம்பள முரண்பாடு நீக்கம் சுற்று நிருபம் வந்துள்ளது

(கொழும்பு)

எழுதுநர் மற்றும் அதை ஒத்த சேவைகளினதும் சிறுபணியாளர் தரங்களினதும் சம்பளமுரண்பாடுகளை அகற்றுதல் சம்பந்தமான 29/94 இலக்க சுற்றறிக்கை அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரினால் சகல செயலாளர்களுக்கும்திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டம் வருமாறு: அதி சிறப்பு தரம் 47640-15X1560-71040, வகுப்பு I 41520-8X1200-10X1560-66720 வகுப்பு II அ) 35640-6X780-9X1200-51120 வகுப்பு II ஆ) 29400.- 5X660.- 11X780 - 41280 சிறுபணியாளர் தரங்களின் தொடக்க உச்சச் சம்பளப்படிகள் 3 சம்பள ஏற்றப்படிகளால் அதிகரிக்கப்படும்.

## சுயவிருப்பில் விடுமுறையில் சிசில் நாடு திரும்பினார்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கு முன்பாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா நாடு திரும்பியது சொந்த விருப்பத்தின் பெயரிலேயே ஆகும். தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அவரை அரசாங்கம் அழைக்கவில்லை எனவும், சுய விருப்பின் அடிப்படையில் விடுமுறை பெற்றே அவர் கொழும்புக்கு வந்தார் எனவும் தெரியவருகின்றது.

அரசாங்கத்தின் அழைப்பையடுத்தே வைத்தியரட்ணா நாடு திரும்பியதாகவும், இராணுவத் தளபதியாக அவர் மீண்டும் நியமனம் பெறுவார் என்றும், ஜனாதிபதி செயலகத்திலிருந்து பணியாற்றுவார் என்றும் செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

## க.பொ.த. உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தல்

முன்னணி ஆட்சியை அமைத் திருக்கும் போதும், அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் தற்போதைய சுதந்திர சந்தைப் பொருளாதார அடிப்படையிலான கொள்கைகளிலிருந்து வேறுபடுவதற்கு இல்லை புதிய ஆட்சியமைப்பின் கீழ் அதன் துடிப்புமிக்க போக்கில் மாறும் சாத்தியமும் இல்லை இவ்வாறு வங்கியாளர்களும், பொருளியலாளர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

போதும், ஐ.தே.க ஆட்சி கடைப்பிடித்து வந்த திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு திருமதிசந்திரிகா தலைமையிலான புதிய அரசினால் ஆபத்து எதுவும் நேராது எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவ்வாறான யோசனை எதையும் வெளிப்படுத்தவில்லை எனவும் வர்த்தகப் பிரமுகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்,

வும் விளையாட்டுப் போட்டியும் நிலைய மைதானத்தில் தலைவர் திரு ந. ஸ்ரீகரன் தலைமையில் நடைபெற்றது. விடுதலைப்புலிகள் பருத்தித்துறை வட்டப் பொறுப்பாளர் திரு. கண்ணதாசன் தேசியக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்; பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திருச, செவ்வந்தி நாதர் விழாவிலே பிரதம விருந்தினராக்கலந்து கொண்டார். (25)

## முஸ்லிம்கள் யாழ் வந்ததும் எம். பி. பதவியை துறப்பேன்

**-டாக்டர் இலியாஸ்**

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிச் சென்றதும் எனதுபாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பேன். இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள டாக்டர் எம். ஐ இலியாஸ் கூறியுள்ளார்.


அவர் மேலும் கூறுகையில் இடம் பெயர்ந்த முஸ்லிம்களுக்காகவே யாழ்ப்பாண மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களாகப் போட்டியிட்டோம். அவர்கள் வாக்களித்து என்னை பாராளுமன்றப் பிரதிநிதியாக தெரிவு செய்திருக்கின்றார்கள். முஸ்லிம் காங்கிரஸ் தவிச்ச முயல் அடிக்க விரும்பி இத் தேர்தலில் போட்டியிடவில்லை. எப்போது யாழ்ப்பாண முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைக்கிறார்களோ அப்போது நாம் எமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து விடுவோம் எனவும் தெரிவித்தார்.

## க.பொ.த. உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தல்

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் முதலாம் கட்ட விடைத்தாள்கள் திருத்தும் பணி நாளை முதல் ஆரம்பமாகும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல கூறியுள்ளார்.

இப் பணியில் 3500 ஆசிரியர்கள் ஈடுபடுவார்களெனவும், இவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 9-ம் நாள் கண்ணீர் அஞ்சலி





**இராகுலா (வவ[illegible])** — பிறப்பு: 28-11-69

**அனுலா (சூட்டி)** — பிறப்பு: 11-7-71

மீசாலை வடக்கை பிறப்பிடமாகக்கொண்டவர்களும், ஜேர்மனில் வசித்தவர்களுமான சகோதரிகள் இராகுலாவும், அனுலாவும் விபத்தில் 15-8-94 அன்று காலமானார்கள். இவர்கள் முறையே தவராசாவின் அன்பு மனைவியும், மதுஷனின் அன்புத்தாயாரும், முகுந்தனின் அன்பு மனைவியும், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் குலசிங்கம், இராசம்மா, தம்பதிகளின் புதல்விகளும், குசலா, ஜயந்தி, யமுனா, ஆகியோரின் அருமைச் சகோதரிகளுமாவார்கள். தங்களின் தாங்கொணாப் பிரிவால் வடிக்கும் எங்கள் கண்ணீரை நிறுத்த முடியாது தவிக்கின்றோம்.

இங்ஙனம்
குலசிங்கம் குடும்பத்தினர்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(9165)

## தேசிய கலாசார கொள்கை வகுக்கப்படல் வேண்டும்

**-லக்ஸ்மன் ஜெயக்கொடி**

(கொழும்பு)

தேசிய கலாசாரக் கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும் இவ்வாறு கலாசார மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி கூறியுள்ளார்-

அமைச்சின் அதிகாரிகளின் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில் கலாசாரத்திற்கு முக்கிய இடம் வழங்குவதே அரசின் கொள்கையாகும் நகரம், கிராமம், தோட்டப்புறம் என வெவ்வேறு இடங்களில் வேறுபட்ட கலாசாரங்கள் நிலவுகின்றன. இதன் பொருட்டு தேசிய கலாசாரம் ஒன்று வகுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது எனவும் தெரிவித்தார்-

## மட்டக்களப்பில் படையினர் வீடுகளில் இரவில் புகமுயற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிரடிப்படையினரும், பொலிசாரும் இரவு வேளைகளில் தமிழ் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து தமிழ் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த மாத இறுதிப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் வீரன்சேனைப் பகுதியில் இரவு வேளையில் குடிசை வீடுகள் இரண்டில் அதிரடிப் படையினர் புகுந்ததையடுத்து மக்கள் கூக்குரல் எழுப்பினர்.

கொள்ளையிடும் நோக்கிலும், தகாத செயல்களில் ஈடுபடும் நோக்கிலுமே அதிரடிப் படையினர் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புக முயல்வதாகக் கூறப்படுகிறது.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | | வீரச்சாவு |
|---|---|---|
| 28 |  | 23 |
| – | | – |
| 3 | | 8 |
| – | | – |
| 1975 | | 1990 |

**வீரவேங்கை பாபுஜீ**
**(ஐயாத்துரை அருள்செல்வன்/இராஜாக்கள்)**
சந்தை வீதி காங்கேசன்துறை

தமிழ் அன்னைக்கே தலை வணங்கும்
எங்கள் வீரத் தலைவன் அணியினிலே
தென்றலென தவழ்ந்தாய்
எதிரி வந்து எம் மண்ணில் கால் பதிக்க
புயலென விரைந்தாய் புலியென பாய்ந்தாய்
ஊர்காவற்றுறை மண்ணில் உன்
திருமேனி சரிந்த அந்த நாள்
இன்று போல் இருக்குதையா
ஓடினது ஆண்டுகள் நான்கு
வாடியே நிற்கின்றோம் மீண்டும்
வரவேண்டும் நீ இங்கு.

மேஜர் சோதியா வீதி,
(லவ் லேன்)
உடுவில்.

(9150)

உன் நினைவால் வாடும்
ஆடியபாதம்
குடும்பத்தினர்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.



# சிந்தனைக்கு..

இடுப்பு உடைந்த கோழிக்கு
உரக்குழியே கைலாசம்.

- தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 23 03 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## மானம் என்றால் என்ன?

யாழ். மாவட்டத்தில் நடந்த தேர்தல் முடிவுகளின் படி சுயேட்சையாகப் போட்டியிட்ட ஈபிடிபிக்கு ஒன்பது பாராளுமன்ற ஆசனங்கள். ஆசன அடிப்படையில் பார்த்தால் பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி.

இக்கட்சி / குழுவின் அரசியல் நிலைப்பாடு ஆட்சி அமைக்கும் எவருக்கும் நிபந்தனைகள் எதுவுமற்ற ஆதரவு என்பதாகும். இந்நிலைப்பாட்டிற்குக் காரணம் அவர்களுக்கென கொள்கை எதுவுமில்லை என்பது மட்டுமல்ல, தங்கி வாழ்ந்தும், தண்டி வாழ்ந்தும் பழக்கப் பட்டுப் போய் விட்டவர்களுக்கு தனித்து வாழ முடியாது என்ற நிலை. இது ஒருபுறம்.

அடுத்த பக்கத்தில் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாது போனதால் சிறு கட்சிகளுடன் உறவை வளர்த்துக் கொள்ள முனையும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஒரு ஆசனத்தை மட்டும் பெற்ற ஒரு சுயேட்சைக் குழுவிற்கு அமைச்சுப் பதவி வழங்குவது குறித்து சிந்திக்கும் அளவிற்கு ஆசனப் பற்றாக்குறை. எப்பொழுதும் எதுவும் நடக்கலாம் என்ற அபாயமான அரசியற் சூழ்நிலை. கயிற்றில் நடக்கும் தள்ளாட்டம்.

ஆனால், இவ்வாறு இருந்தும் ஈபிடிபி யின் நிபந்தனையற்ற ஆதரவைப் பெற்றுக் கொண்டு ஆட்சியை நிலைநிறுத்துவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் பெரும்பாலானவர்கள் விரும்பவில்லை. பொ.ஐ முன்னணியின் இந்நிலைப்பாடானது ஒருவகையில் முன்னேற்றகரமானதுதான். மூன்றாம் உலக நாடுகளில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு நிபந்தனையுடன் கூடியதென்றாலும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு அரசியற் கட்சிகள் போட்டியிடும் நிலையில் இந்நிலை சற்று மாறுபட்டதுதான்.

ஈபிடிபியை பொ.ஐ.மு ஒதுக்குவதற்குக் காரணங்கள் பல அவர்கள் கூறலாம். முதலாவதாக, ஈபிடிபி யின் தெரிவானது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு ஜனநாயக வரம்பிற்கு உட்பட்டதாக இல்லை எனக் கூறலாம். தேர்தல் ஆணையாளரே இவர்களின் தெரிவு பற்றித் திருப்தி கொள்ளவில்லை. இந்நிலையில் இவர்களுடன் கூட்டு வைத்து மீண்டும் ஜனநாயகத்தை மலர்விக்கப் போவதாகக் கூறும் புதிய பிரதமர் சந்திரிகா

# வருங்கால சந்ததிக்கு ஊட்டமளிக்கும் போசாக்கு புனர்வாழ்வு நிலையம்

வடபகுதியின் மீதான பொருளாதாரத் தடைகள் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மோசமாகப் பாதித்து வருகின்றன. உணவுப் பொருள்கள், மருந்துகள், திரிபோஷா, குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான தடுப்பு மருந்துகள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் அண்மைக்காலத்தில் இதனை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

கிராமங்களில் உழைக்கின்ற ஆண்களை இழந்துள்ள அல்லது தொழில் இழந்துள்ள குடும்பங்களின் குழந்தைகள் போசாக்கு நிலையில் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் அடுத்த பிறந்த தினத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்பே இறந்துவிடக் கூடிய நிலையில் மூவாயிரம் குழந்தைகள் உள்ளனர் என்ற அதிர்ச்சி தரும் உண்மையை யாழ் பல்கலைக்கழக சமூக மருத்துவபீட விரிவுரையாளர்கள் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம், யாழ் பல்கலைக்கழக சமூக மருத்துவபீட விரிவுரையாளர்கள், தாய் சேய்நல வைத்திய அதிகாரிகள் உட்பட பலரது ஆலோசனைகளைப் பெற்று உடனடி நடவடிக்கையில் இறங்கியது.

இதனடிப்படையில் போசாக்குபற்றாக்குறையினால் இறக்கக் கூடிய நிலையில் உள்ள குழந்தைகளைப் பாதுகாத்து வாழ வைக்கும் நோக்கில் போசாக்கு புனர்வாழ்வு நிலையங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் 1992 காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கெற்பலி பண்டிதர் குடியிருப்பிலும் அம்பன் இராஜன் நகரிலும் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மாவட்டம் மடு இடம்பெயர்ந்தோர் முகாமிலும், முல்லை மாவட்டம் கிழக்கு மாகாண இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள உடையார் கட்டு பகுதியிலும் ஆரம்பித்து தனது சேவையைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் விஸ்தரித்துள்ளது.

குறிப்பாக பிறக்கின்ற குழந்தைகள் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் போசாக்கு நிலையில் பாதிக்கப்படும் போது அவர்களது மூளைவளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது இதனால் உயரத்திற்கேற்ற நிறை என்ற பொது அலகு முறையை கடைப்பிடிக்க முடியாமலுள்ளது.

பிறக்கும் போது குழந்தை ஒன்றின் நிறை ஆகக் குறைந்தது 2500கிராமாக இருத்தல் வேண்டும் ஆனால் இக் குறிப்பிட்ட நிறையிலும் நிறை குறைந்த பிள்ளைகளே இப்போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் பராமரிக்கப்படுகின்றனர்.

பிறந்து 6 மாதங்களின் பின் 2 மடங்காகவும் ஒரு வருடத்தின் பின் 3 மடங்காகவும் நிறை அதிகரித்தல் வேண்டும் ஒரு மாதத்தில் நிறை அதிகரிப்பு ஏற்படாவிடில் குழந்தைகள் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைத்து சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள்

இந் நிலையத்தில் வைத்து குழந்தைகளுக்கு மருந்து வகைகளுடன் போசாக்கு உணவு வகைகளும் மற்றும் இலைக்கஞ்சி, பயறு, கொழுக்கட்டை, உழுத்தங்களி, மரக்கறிசூப், முட்டை, பொரிகடலை மா போன்ற உள்ளூர் உற்பத்திகளும் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கான மருத்துவ ஆலோசனைகளை யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பிரிவு வழங்கி வருகிறது

> தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஓர் அங்கமான போசாக்கு புனர்வாழ்வு நிலையம் அண்மையில் தனது இரண்டாவது ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்துள்ளது அதனை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறுபிரசுரம் இங்கு முழுமையாக வெளியிடப்பட்டுள்ளது.

இங்கு தங்குகின்ற குழந்தைகளுக்கு வைத்திய அதிகாரிகளின் சிபாரிசின்படியான உணவுவகைகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் குழந்தைகளுக்கான உணவுவழங்கலில் புதிய அனுபவங்களை வெளியிலும் தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

இத்திட்டத்தின் முக்கிய அளவுகோலாக சமூக மருத்துவ பீடத்தினரால் தரப்பட்ட வரைபடம் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வரைபின் மூலம் ஆரோக்கிய வளர்ச்சி, ஆபத்தான நிலை, மிக ஆபத்தான நிலை என்ற மூன்று நிலைகளில் குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டு போசாக்கு புனர்வாழ்வுநிலையத்தால் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

குழந்தைகளை தெரிவு செய்வதற்காக தமிழர் புனர்வாழ்வுகழகத் தொண்டர்கள் இடம் பெயர்ந்தோர் முகாம்கள் பின்தங்கிய கிராமங்களில் நடமாடும் போசாக்கு ஆய்வு சேவையை நடாத்தி தங்களுடைய சேவையை வழங்கி வருகிறார்கள், அத்துடன் சுகாதார மருத்துவ தாதியர்களும் வைத்திய அதிகாரிகளும் ஆபத்தான நிலையில் உள்ள குழந்தைகளை தெரிவு செய்வதில் பெரும்பங்கு ஆற்றியும் வருகிறார்கள்

இவ்வாறு தெரிவு செய்யப்படும் குழந்தைகளில் மிக ஆபத்தான நிலையில் உள்ள குழந்தைகள் தாயுடன் போசாக்கு புனர்வாழ்வு நிலயத்தில் தங்க வைக்கப்படுவர் இதற்கென போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் குழந்தைகளை தெரிவு செய்வதற்கான வாராந்த கிளினிக்குகள் தமிழர் புனர்வாழ்வுகழகத்தால் நடாத்தப்படுகின்றன.

இத்தாய்சேய் நல கிளினிக்கில் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் அடிப்படையில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தமிழர் புனர்வாழ்வு கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

1. குழந்தை பரிசோதிக்கப்பட்டு குழந்தைக்கு வேண்டிய பாலுணவு, போசாக்குணவு, ரொனிக் வகைகள் வழங்கப்படும்;

2. நோய் எதுவும் காணப்படின் குழந்தை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும்;

3. குழந்தையின் பெற்றோரின் குடும்பநிலை தொழில், வருமானம் கவனத்தில் எடுக்கப்பட்டு தேவைப்படின் நிவாரண உதவிகள் வழங்கப்படும்.

4. தொழில் செய்யக் கூடியவர்களுக்கு தேவைப்படும் கட்டணங்களில் தொழில் செய்வதற்கான பணம் கடனாக வழங்கப்படும்.

5. தங்கவைக்கப்படும் குழந்தைகள் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் நிறை தேறும் வரை சிகிச்சை அளிக்கப்படுவார்கள்.

இவ்வாறு நிறை தேறி புனர்வாழ்வு பெற்று வெளியேறும் குழந்தைகள் வாராந்தம் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெறும் கிளினிக்குகளில் கலந்து கொள்ளவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த வகையில் இன்று வரை 1580 க்கும் மேற்பட்ட குழந்தைகள் போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தால் பராமரிக்கப்பட்டுள்ளார்கள்.

## இல. தமிழர் ஒருவர் உட்பட கொள்ளைக் கோஷ்டி கைது

சென்னையில் நடிகை கே. ஆர். விஜயாவின் வீடு உட்பட நாற்பது வீடுகளில் பத்து இலட்சம் ரூபா மதிப்புள்ள நகைகளைத் திருடிய கோஷ்டியொன்று பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது,

இக் கோஷ்டியினர் நடிகை கே. ஆர். விஜயா, தொழில் அதிபர் அனந்த கிருஷ்ணன், அகமது ரகுபதி மற்றும் நான்கு ஐ ஏ-எஸ்

## உலகம் தேடிய தீவிரவாதி கார்லோஸ் சூடானில் கைது

(பாரிஸ்)

உலகெங்கும் தொடர்ச்சியான பல கெரில்லாத் தாக்குதலை நடத்தியதன் மூலம் உலக நாடுகளால் வேண்டப்பட்ட பெருநரி கார்

ஆவார்,

1975-ல் வியன்னாவில் நடைபெற்ற 'ஒபெக்' எண்ணெய் நாடுகளின் மகாநாட்டிலிருந்து 11 அமைச்சர்களைக் கடத்திச் சென்ற

தாக வழக்கறிஞர் ஒருவர் கூறினார் இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவு அனைவரையும் கவர்ந்துள்

ஒரு ஜனநாயக வாய்ப்பிற்கு உட்பட்டதாக இல்லை எனக் கூறலாம். தேர்தல் ஆணையாளரே இவர்களின் தெரிவு பற்றித் திருப்தி கொள்ளவில்லை. இந்நிலையில் இவர்களுடன் கூட்டு வைத்து மீண்டும் ஜனநாயகத்தை மலர்விக்கப் போவதாகக் கூறும் புதிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தம்மைக் களங்கப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை எனத் தெரிவிக்கலாம்.

இரண்டாவதாக இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வு காண்பதற்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்வதாகக் கூறும் புதிய அரசாங்கம் ஈபிடிபியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதன் மூலம் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒரு புதிய சிக்கலை உருவாக்கி தமது முயற்சியில் முட்டுக்கட்டைகளைப் போட விரும்பவில்லை எனவும் கூற முனையலாம்.

நேர்மையான, கண்ணியமான அரசியல் பாரம்பரியங்களுக்கு இவை வலுவான காரணங்களாக இருப்பினும், ஈபிடிபியை ஆட்சியில் இணைத்துக் கொள்ளாமல் புறந்தள்ளுகின்ற எமக்கு இவற்றைவிட ஆழமான வேறு காரணங்களும் பொஜதுன ஐக்கிய முன்னணி தரப்பில் உள்ளது இதில் முக்கியமானது கடந்த ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் ஈபிடிபி - ஐதேக அரசின் ஆயுதக் குழுவாக எதிர்த்தரப்பினரை அச்சுறுத்தி வந்தமையே ஆகும்.

ஆயுதம் தாங்கிய தமிழ்க்குழுக்கள் பொதுவாகவே சிறிலங்கா இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வந்திருப்பினும் ஈபிடிபியே ஐதேகவின் உத்தியோக பூர்வ ஆயுதக்குழு போன்று பிரேமதாசா காலத்தில் இருந்து இயங்கி வந்தது. தமிழ்ப் பிரதேசங்களுக்கு அப்பாலும் இவர்களின் செயற்பாடு இருந்தது இது எதிரணியினரையும் அச்சுறுத்துவதாகவும் அமைந்தது.

இந்நிலையில், முதல் இரு காரணங்களையும் விட பின்னையதே பொஐ முன்னணிக்கு ஈபிடிபி மீது வெறுப்பூட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே காரசாரமாக ஈபிடிபி பற்றி கருத்துக்களை வெளியிட்டு வந்த பொஐமு தற்பொழுது ஈபிடிபி மண்டியிட்டு கோரியபோதும் பழையதை மறந்து விடத் தயாராகவில்லை போல் தெரிகின்றது. நீண்டகாலமாகவே ஐதேகவின் கைக்கூலிகளாக இயங்கி வந்த இவர்களில் அவர்களுக்கு நம்பிக்கையும் இல்லை.

இதேசமயம் மக்களின் பிரதிநிதிகள் என தம்மைக் கூறிக் கொள்ள முனையும் ஈபிடிபியினர் மற்றவர்களிடம் மண்டியிடுவது அவமானகரமானது. இது தாம் மக்களின் பிரதிநிதிகள் என்பதை அவர்களே மறுக்கும் நடவடிக்கை. ஆனால் அவர்களின் குத்துக்கரணங்களும், அடிவருடித்தனங்களும் கடந்தகால வரலாற்றில் பின்னிக்கிடப்பவை தான். கைக்கூலிகளாகவே செயற்பட்டுப் பழக்கப்பட்டுப் போய்விட்ட அவர்களுக்கு மானம் என்பது எங்கிருந்து வரும்? கிலோ என்ன விலை என்று அவர்கள் கேட்கவும் கூடும்,

ஆர். விஜயாவின் வீடு உட்பட நாற்பது வீடுகளில் பத்து இலட்சம் ரூபா மதிப்புள்ள நகைகளைத் திருடிய கோஷ்டியொன்று பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளது. மோகன் அல்லது பாபு அல்லது குணராஜா, அல்லது குணா பட்டு இக்பால்போன்ற பெயர்களால் அழைக்கப்படும் இலங்கைத் தமிழரும் இவர் பிடத்தக்கது,

இக் கோஷ்டியினர் நடிகை கே. ஆர். விஜயா, தொழில் அதிபர் அனந்த கிருஷ்ணன், அகமது ரகுபதி மற்றும் நான்கு ஐ ஏ-எஸ் அதிகாரிகளின் வீடுகள் இக் கோஷ்டியினரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிசாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது-

## பாகர்களை துரத்திய சர்க்கஸ் யானை

ஹெய்ரோ நாட்டில் சர்க்கஸ் யானை ஒன்று மதம் பிடித்து அலைந்ததினால் அதனைப் பார்வையிடவந்த மக்கள் அச்சமும் அதிர்ச்சியும் அடைந்து சிதறி ஓடினர். யானைப் பாகனை தாக்கிக் கொல்வதற்கு அந்த யானை பெரும் பிரயத்தனம் செய்தது. முதலாவது பாகனை சொலை செய்த யானை இரண்டாவது யானைப்பாகனைத் தேடியது. இரண்டாவது பாகன் தப்பிஓடி மறைந்ததும் வீதிகளில் அந்த யானை ஓடித்திரிய ஆரம்பித்தது.

சர்க்கஸ் மைதானத்திலிருந்து புறப்பட்ட யானை சமீபத்திலிருந்த வாகனங்கள் நிறுத்தும் இடத்திற்குச் சென்றது. அங்கு இரண்டாவது பாகனைக் கண்ட யானை அவனை துரத்திப்பிடித்துத் தாக்கிய போதிலும் வேறு எவரையும் அது தாக்கவில்லை.

இரண்டாவது பாகனைத் தாக்கிய யானை விற்பனை நிலையத்திற்குச் சென்றது. அங்கிருந்து மக்கள் நடமாட்டம் மிகுந்த வீதியிலும் அது பிரவேசித்தது. பொலிஸ் வீரர்கள் சுடுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டபோது யானை மீது வேட்டுக்களைத் தீர்த்தார்கள். இதனாலும் யானையின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை பொலிசார் தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டுக்கொண்டேயிருந்தார்கள். இறுதியில் யானை சுற்றிவளைக்கப்பட்டது. அதன்மீது துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்தும் தீர்க்கப்படுவதைக்கண்ட மக்கள் கண்ணீர்விட்டு அழுதனர்.

## ரஷ்யாவிற்கு உதவுவதற்கு ஜேர்மன் அரசு நிபந்தனை

(பொன்)

அணுசக்திப் பொருட்கள் கடத்திச் செல்லப்படுவதைத் தடுப்பதில் மாஸ்கோ ஒத்துழைப்பு வழங்கினால் தான் ரஷ்யாவிற்கான பொருளாதார ஒத்துழைப்பு தொடர்ந்து வழங்கப்படும் என்று ஜேர்மன் அரசு தெரிவித்துள்ளது.

பொன்நகரில் ஜேர்மன் அரசின் சார்பில் அதன் உள்துறை அமைச்சர் ஒருவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதேவேளை ஜேர்மனியின் பாதுகாப்பு அமைச்சர் மாஸ்கோ சென்று அணுசக்திக் கழிவுப்பொருட்கள் கடத்தப்படுவதை தடுப்பது தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

(பாரிஸ்)

உலகெங்கும் தொடர்ச்சியான பல கெரில்லாத் தாக்குதலை நடத்தியதன் மூலம் உலக நாடுகளால் வேண்டப்பட்ட பெருநரி கார்லோஸ் கடந்த 18ம் திகதி முதல் தடவையாக பிரெஞ்சு நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

20 ஆண்டுகள் பிடிபடாமல் தப்பியிருந்த கார்லோஸ் 127 ஆண்டுகாலப் பழமைவாய்ந்த பாரிஸ் சிறை ஒன்றில் தற்போது வைக்கப்பட்டுள்ளார் உலகம் பூராவுமுள கெரில்லா அமைப்பு இரகசியங்கள் பற்றியும் ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்கு வழியாக ஜப்பான் வரை எந்தெந்த நாடுகள் கொலைகளுக்கு ஆதரவளித்தன என்ற விபரங்கள் பற்றியும், கார்லோஸிடமிருந்து பெற முடியும் என பிரான்ஸ் கருதுகிறது-

ஆனால் கார்லோஸ் கைது செய்யப்பட்டிருப்பது அவரது தீவிர இடது சாரிக் கொள்கையை ஆதரிக்கும் கெரில்லா குழுக்களின் தாக்குதலுக்கு வழிவகுக்கும் என எதிர் உளவு நிபுணர்கள் கூறியுள்ளனர்.

லாஸான்டே சிறையில் ஒரு இரவைக் கழித்த கார்லோஸ் 1982-ஆம் ஆண்டு பொரியிலுள்ள சாம்பஸ் எலிஸியில் குண்டு வைத்தது சம்பந்தமாக நீதிபதியினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

இச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டு 63 பேர் காயமடைந்தனர். இது ஒன்றுக்காகவே பிரான்ஸ் கர்லோஸ் மீது வாரண்ட் பிறப்பித்திருந்த போதிலும் 1975 ஆம் ஆண்டில் இரு பிரெஞ்சு எதிர் உளவு ஏஜெண்டுகளைக் கொலை செய்ததாக அவர் இல்லாமலேயே விசாரணை நடத்தப்பட்டு கார்லோஸுக்குமரண தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் சூடானில் கைது செய்யப்பட்டு பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். வெனிசூலவில் பிறந்த அவர் 1970-ஆம் ஆண்டுகளில் உலகில் மிகவும் தீவிரமான பல கெரில்லா நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டிருந்தவர் ஆவார்,

1975-ல் வியன்னாவில் நடைபெற்ற 'ஒபெக்' எண்ணெய் நாடுகளின் மகாநாட்டிலிருந்து 11 அமைச்சர்களைக் கடத்திச் சென்ற சம்பவத்திலும் அவர் சம்பந்தப்பட்டிருந்தார். ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளாலும் இவர் தேடப்பட்டவராவார்.

1949-இல் பிறந்த இவர் தன் கையாலேயே 83 பேர்களைக் கொன்றிருக்கிறார். பிரான்ஸில் குறைந்தது 15 பேர்களும் ஐரோப்பா மத்திய கிழக்கு ஆகிய நாடுகளில் மற்றவர்களும் கொல்லப்பட்டனர்.

'பயங்கரவாதம்' பற்றி ஒரு புள்ளி விபர வங்கியாக கார்லோஸ் விளங்குகிறார் என பிரெஞ்சு புலனாய்வு நிபுணர் ஒருவர் கூறினார். கார்லோஸை மீட்கும் முயற்சிகளும் இடம் பெறக் கூடும் என பாரிஸிலுள்ள புலனாய்வு பணிகளுக்குப் பொறுப்பான வழக்குத் தொடுநர் எச்சரித்திருக்கிறார். இது ஒரு முடிவா? அல்லது புதிய இரத்தம் தோய்ந்த அத்தியாயத்தின் தொடக்கமாகஇருகுமா என்பதை வருங்காலமே கூறும் என அவர் தெரிவித்திருந்தார்.

பல கொலைகளின் சூத்திரதாரியான பெருநரி கார்லோஸும் மிகவும் கடுமையாக நடக்கும் நீதிபதியும் முதன் முதலில் சந்தித்த போது பரஸ்பரம் இருவரும் மரியாதையுடன் நடந்து கொண்டனர்.

நீங்களும் நானும் நல்ல முறையில் நடந்து கொள்ள இருக்கிறோம் நாங்கள் ஒரே மரத்தில் வெட்டப்பட்டவர்கள் என கார்லோஸ் நீதிபதியிடம் கூறினார் இதன் பின் ''நாங்கள் இருவரும் தொழிற்துறை விற்பன்னர்கள்'' என நீதிபதி நிருபர்களிடம் கூறியுள்ளார்

உலகில் மிகவும் தேடப்பட்ட கார்லோஸும் நீதிபதியும் புத்திசாதுரியமான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். அதிசய மனிதரான கார்லோஸின் தோற்றத்தில் நீதிபதி கவரப்பட்டதாக வழக்கறிஞர் ஒருவர் கூறினார் இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவு அனைவரையும் கவர்ந்துள்ளது ஒருவர் சட்டத்தை விசுவாசமாக அமுல் நடத்துபவர் மற்றவர் தீவிர மார்க்ஸீய வாதியும் தானே ஒப்புக் கொண்ட கொலையாளியுமாவார்

கார்லோஸ் பிரான்சிற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து நீதிபதி புருகயர் தனது விடுமுறையை ரத்துச் செய்துவிட்டு பாரிஸ் விரைந்தார் இனி அடுத்தவாரம் தான் கார்லோஸ் அவர்முன் ஆஜராக இருக்கிறார்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 23 செவ்வாய் இரவு

08. 01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10 - அறிந்துகொள்ளுங்கள் - தகவற் களஞ்சியம்
08. 20 - நலந்தானா 'திருவிழாக் காலங்களில் பரவக்கூடிய தொற்று நோய்கள்''
08. 30 - செய்திகள்
08. 40 - கருத்துக்களம் - ''பதவி''
08. 50 - களமும் கானமும் -''எதிர்பார்ப்பு''

### 1994. 08. 24 புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# ஒருவருட காலத்திற்குள் நாட்டில் அகதிகள் எவரும் இருக்கமாட்டார்

## அஷ்ரப்

(கொழும்பு)
இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படும்- இன்னும் ஒரு வருடத்தினுள் இந் நாட்டில் அகதிகளாக எவரும் இருக்க மாட்டார்கள் என கப்பல் போக்குவரத்து துறைமுக புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சர் எம்-எச்-எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார்-

நேற்றுக் காலை தமது அமைச்சில்கடமையைபொறுப்பேற்றபின் செய்தியாளர்களிடையே அவர் பேசினார்- அம்பாறையில் புதிய துறைமுகம் நிறுவப்படும்- காங்கேசன் துறை துறைமுகத்தைமேலும் சிறந்த முறையில் மீண்டும் இயங்கவைக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்- தற்போது லாபமற்ற முறையில் இயங்கும் திருகோணமலை, காலி துறைமுகங்கள் குறித்த பிரச்சினைகளை ஆராய குழு அமைக்கப்படும் எனவும் அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார்-

# சண்டே ஒப்சேவரில் சந்திரிகா வர்ணப்படம்

(கொழும்பு)
லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஞாயிறு பத்திரிகையான சண்டே ஒப்சேவருடன் இம்முறை புதிய பிரதமர் சந்திரிகாவின் வர்ணப்படங்களும் தனியாக இணைக்கப்பட்டிருந்தன.
சந்திரிகா குறித்த அரசியல் கட்டுரைகளும் இம்முறை அப்பத்திரிகையில் வெளியாகியுள்ளன-

# மாற்றமடையாத கல்விக்கொள்கை விரைவில் வகுக்கப்படும்

## கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான

(கொழும்பு)
அரசாங்கங்கள் மாறினாலும், மாற்றமடையாத வகையில் தேசியக் கல்விக் கொள்கை ஒன்று உருவாக்கப்படும் என கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில், நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தாம் விரும்பும் ஒரு கட்சியை ஆதரிக்கும் உரிமை இருப்பதாகவும் எனவே கல்வி சேவைகள் அமைச்சில் ஐ. தே. கவை ஆதரித்த சாதாரணஊழியர்களிடையே, தான் அரசியல் வஞ்சம் தீர்க்கப் போவதில்லையென மேலும் அவர் தெரிவித்தார்

புதிய உயர்கல்வி அமைச்சர் பொறுப்புக்களை ஏற்கும் போது முன்னாள் அரசாங்கத்தின்கல்விச் சேவை அமைச்சர் வி. ஜே. மு. லொக்குபண்டார சமசம் அளித்து தமது கடமைகளை ஒப்படைத்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எந்தக் காரணத்தைக் கொண்டும் தனது அமைச்சில் அரசியல் பழிவாங்கல்களை தாம் மேற்கொள்ளப்போவதில்லை என உறுதி அளித்துள்ளார்.

கல்வித் தகைமைக்கு ஏற்ற பதவிகள் எதிர்காலத்தில் வழங்கப்படும் என்றும் சில அதிகாரிகள் அதற்கேற்ற தகைமையற்ற பதவிகளில் இருப்பது தொடர்பாக தான் விரைவில் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும்அவர் தெரிவித்தார்.

தனியார் மயப்படுத்தப்பட்ட இலாபமீட்டும் சேவைகள் மீளவும் கூட்டுறவுத்துறையிடம் ஒப்படைக்கப்படும் என மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகமும் கூட்டுறவுத்துறை மூலம் செயற்படவு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினை தீர்விற்கு புதிய அரசுடன் ஒத்துழைப்போம்

(கொழும்பு)
இனப்பிரச்சினைக்கு ஓர் நிலையான தீர்வை ஏற்படுத்தும் நோக்குடன் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஒத்துழைப்பை நல்கும் என இக் கட்சியின் கண்டி மாவட்ட

செல்வத்துடன் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி, தன்னையும் முன்னாள் அரசியல் அமைப்பு அமைச்சர் சொக்சியையும் நியமனம் செய்துள்ளதாக காமினி திசாநாயக்கா மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் இக் கலந்துரையாடல் தொடர்பான பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் விரைவில் கருத்துப் பரிமாற்றம் நடைபெறும் எனவும் கூறினார்.

# முன்னாள் அமைச்சர்களின்

## வீரச்சாவு



### வீரவேங்கை யாழ்தேவி

யாழ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தவறுதலான விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் பெண் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

வீரச்சாவடைந்த வீரவேங்கை யாழ்தேவி (தப்பிராசா வினிதா, புங்குடுதீவு, யாழ்ப்பாணம்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# கடற்படை தாக்குதலால் கட்டுமரங்கள்சேதம்

(வடமராட்சி)
வடமராட்சி வடக்கு கடற் பிராந்தியத்தில் கடற்படையினர் மேற்கொண்ட பலத்த தாக்குதலில் மீனவர்களின் கட்டுமரங்கள் சேதமடைந்தன,

பலாலியில் இருந்து வெற்றிலைக்கேணி நோக்கி சென்றுகொண்டிருந்த கடற்படையினர் அப்பகுதிமீது மேற்கொண்ட தாக்குதலில் பலத்த சேதம் ஏற்பட்டது. வல்வெட்டித் துறை ஊறணி குடியிருப்பு மீது ஷெல் விழுந்த போதிலுப் சேதம் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

அதே சமயம்மணற்காடு பகுதிகள் மீதும் தாக்குதல் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் மாலை 4-00 மணியளவில் மணல்காடு பகுதியை நோக்கி கடற் படையினரால் கடும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எனினும் சேதங்கள் ஏற்பட்டதாக தெரியவில்லை. (யோ)

# இரு வீதி விபத்துக்களில் ஒருவர் பலி; இருவர் காயம்

நேற்று யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற இரு வெவ்வேறு வீதி விபத்து சம்பவங்களில் ஒருவர் பலியானார், இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் பலாலி வீதி இலுப்பையடிச் சந்தியில் இடம்பெற்ற மினிபஸ் துவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்ற இருவர் தலையில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் இவர்களில் ஈ. சிவசுந்தரம் (45) என்பவர் மரணமானார் மற்றவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருடன் பயணம் செய்து காய

# பாராளுமன்றம் பிரச்சினை தீர்க்குமென நாம் ஒருபோதும் நம்பவில்லை

## தேர்தலில் தோல்வியுற்ற வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

பாராளுமன்றம் எம்போராட்ட வடிவத்தில் ஓர் அங்கமே தவிர பாராளுமன்றத்தினூடாக பிரச்சினையைத் தீர்க்க முடியும்என நாம் என்றும் நம்பியதில்லை என ஈ பி ஆர் எல் எவ் குழுவைச் சேர்ந்த சுரேஸ்பிரேமச்சந்திரன் பி பி ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார் அவரின் பேட்டி வருமாறு:

கேள்வி: இத் தேர்தலில் ஈ பி ஆர் எல் எவ் ஒரு இடத்தைக் கூட பெறவில்லை இப்படுதோல்விக்கு என்ன காரணம்.

பதில்: முதலாவதாக மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்கிறோம் யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் அங்கு தேர்தலை நாம் தேர்தலாக கணிக்கவில்லை அங்கு நடப்பது ஒரு கேலிக்கூத்து என ஆரம்பம் முதல் நாம் கூறிவந்துள்ளோம் மட்டக்களப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியை பெரும்பான்மையுடன் அனுப்பியுள்ளனர். வன்னியில் அங்கு ஏற்கனவே உள்ள ஆயுதக் குழுக்களால் பல்வேறுபட்ட மிரட்டல் இருந்தமையால் அங்கு அவர்கள் வென்றிருக்கலாம்

கேள்வி: இந்தியப் படை இலங்கையில் இருந்தபோது ஈ பி ஆர் எல் எவ் பெரும் அத்துமீறலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன மக்கள் இதை மறக்காமல் இருந்தமையும் உங்கள் தோல்விக்கு காரணமாகலாமா?

பதில்: ஒன்றை நாம் ஏற்கிறோம் அன்று நாம் மாகாண அரசைக்காக்க குடி மக்கள் தொண்டர் படை ஒன்றை அமைத்தோம் அச் சமயத்தில் 3000 பேர் கொண்ட படை போதாது என்றதால் மேற்கொண்டு 5000 பேரை அதற்கு திரட்டவேண்டியிருந்தது அச் சமயத்தில் அவர்களை திரட்டுவதில் ஏற்பட்ட இடையூறுகள் இருந்ததால் நாம் இளைஞர்களை பலாத்காரமாக சேர்த்தது தவறு என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம் அவ் விடயம் தொடர்ந்து தமிழ் மக்களிடையே இருந்திருக்கலாம் என்பதை ஏற்கிறோம். இதை 1990இல் நாம் பகிரங்கமாக தவறு என ஒப்புக்கொண்டோம்.

கேள்வி: ஆட்கள் சேர்ப்பதைத் தவிர பொதுமக்களை நீங்கள் இம்சைப்படுத்தியதாகவும் கூறப்பட்டது

பதில்: பொதுமக்களை இம்சைப்படுத்தியது என்பதல்ல நாம் இந்த மாகாண அரசை நடத்தும்போது விடுதலைப் புலிகள் அதற்கு எதிரான போரை நடத்திக்கொண்டிருந்தனர் இவ் வகையில் நூற்றுக்கணக்கான ஈ பி ஆர் எல் எவ் போராளிகள் கொலை செய்யப்பட்டுள்ளனர் எம்மை நாம் தற்காக்க வேண்டிய நிலை இருந்தது அச் சமயத்தில் இப்படியான விடயங்கள் நடந்திருக்கலாமே தவிர திட்டமிட்ட வகையில் மக்களுக்கு எதிராக நாம் எதையும் செய்யவில்லை என்பதைத்தான் எம்மால் கூறமுடியும்

கேள்வி: கடந்த பாராளுமன்றத்தில் உங்களுக்கு ஏழு இடங்கள் இருந்தன இப்போது ஒன்றுமில்லை எப்படி செயற்படவுள்ளீர்கள்?

பதில்: பாராளுமன்றம் எம் போராட்ட வடிவத்தில் ஒரு

சினையை தீர்க்க முடியும் என நாம் என்றும் நம்பியதில்லை கடந்த காலத்தில் இந்த பாராளுமன்றம் ஊடாக நாட்டில் நடந்த அட்டூழியங்களை நாம் வெளிக்கொண்டு வந்தோம் பாராளுமன்ற வசதியை பயன்படுத்தி வெளிநாடுகளில் கூட நாட்டின் பிரச்சினையை விளக்கினோம் அவ்வகையில் எம் பிரச்சினையை வெளி உலகிற்கு காட்டும் ஒரு களமாகவும் நாட்டில் நடக்கும் அட்டூழியங்களை தமிழ் மக்களுக்கு எடுத்துச்சொல்லும் ஒரு களமாக இருக்குமே தவிர முற்று முழுதாக பிரச்சினைகளை தீர்க்கும் களமாக இது இருக்கும் என நாம் அன்றும் சரி இன்றும் சரி எதிர்பாக்கவில்லை. இதனால் மக்கள் போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்லவே சூழ்நிலையை மக்கள் எமக்கு தோற்றுவித்து தந்துள்ளனர்

கேள்வி: சந்திரிகா தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணப் போவதாய் கூறியுள்ளார். இதில் நம்பிக்கையுண்டா?

பதில்: சந்திரிகா இன்றுள்ள சூழ்நிலையில் எவ்வாறு நடவடிக்கை எடுப்பார் என்பது புரியவில்லை. நாம் எதிர்பார்ப்பது இந்தப்போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டும். விமானத் தாக்குதலை நிறுத்தவேண்டும். ஏனெனில் அது புலிகளுக்கு எதிரான செயலல்ல மக்களுக்கு எதிரான செயலாகும். பொருளாதாரத்தடை நீக்கப்படவேண்டும். இதற்கு அவரின் கட்சி எவ்வளவு பலமாக இருக்கிறது. தனிப்பெரும்பான்மை இல்லாததால் அதனால் முடிவு எடுத்து செயற்படமுடியாது. எனவே இவரால் ஒரு தீர்வு ஏற்படுமா என்பது இன்றைய சூழ்நிலையில் ஒரு கேள்விக்குறியாகும்.

கேள்வி: நீங்கள் இந்திய சார்புடைய கட்சி என கூறப்படுகிறது உண்மையா?

பதில்: நாம் இந்தியாவின் நண்பர்கள் என யாராவது கூறினால் அதை நாம் ஏற்கிறோம். அதில் எந்த வெட்கத்திற்கும் இடமில்லை.

# ராஜீவ் கொலை வழக்கு

(சென்னை)
ராஜீவ் காந்தி கொலை

கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி நீலன் திருச்

### எதிர்க்கட்சி

இவ் இரகசிய வாக்கெடுப்பின்போது ஐ தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கே வாக்களிக்க வேண்டுமென காமினி திசாநாயக்காவும், ரணில் விக்கிரமசிங்காவும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் எனவும் தெரிய வருகிறது.

இதனால் கட்சி இரு அணிகளாக பிரிந்து காணப்படுவதாகவும் ஐ தே.கவில் மிகவும் பலவீன நிலை தோன்றக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# பாதுகாப்பு வாகனங்கள் வாபஸ்

## ஜனாதிபதி விஜேதுங்கா உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டபாதுகாப்பு வாகனங்கள் உட்பட சகல உத்தியோகபூர்வ வாகனங்களும் வாபஸ்பெறப்படும் என ஜனாதிபதி விஜேதுங்கா அறிவித்துள்ளார். இவ் வாகனங்களை அவர்கள் இனி மேலும் வைத்திருக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் முன்னாள் அமைச்சர்கள், எம். பிகள் மற்றும் புதிய அமைச்சர்கள் எம் பிகள் ஆகியோரது பாதுகாப்பை உத்தரவாதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்என பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார். எம் பிகளுக்கு ஏதும் அச்சுறுத்தல் இருப்பின் அவர்களுக்கு தேவையான மெய்க்காவலர்கள் அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அமர்த்தி கொடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் சிலர் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இருப்பதால் பாதுகாப்பு வாகனங்களை இன்னும் சிலகாலம் வைத்திருக்க ஜனாதிபதியைக் கேட்டுள்ளனர். ஆனால் இவ் வாகனங்கள் யாவும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளால் வழங்கப்பட்டவை. ஆதலால் இவ்வேண்டுகோளை தம்மால் ஏற்க முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்

முன்னாள் அமைச்சர்கள், எம். பிகளுக்கு தமது பாதுகாப்பை தாமே உறுதிசெய்ய முடியாவிட்டால் பாதுகாப்பு வாகனங்களை வழங்குவது குறித்து பரிசீலனை செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி கேட்டுள்ளார்.

# நிபந்தனையற்ற ஆதரவு சந்திரசேகர் உறுதி

(கொழும்பு)

மலையக ஐக்கிய முன்னணியின் தலைவர் சந்திரசேகர் நிபந்தனை எதுவும் அற்ற ஆதரவை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வழங்கப்போவதாக நேற்று தெரிவித்துள்ளார்

நேற்று நண்பகல் கொழும்பு றோஸ்மீட் பிளேஸில் உள்ள சிறிமாவோ பண்டாரநாக்காவின் இல்லத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இம் முடிவுக்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தர்மசிறி சேனநாயக்காவும் இச் சந்திப்பில் உடன் இருந்ததாக தெரிய வருகின்றது

# தொழிலாளர் நியமனம் நிரந்தரமாக்கப்படும்

### மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

தொழிற்சாலைகளிலும், வேலைத்தலங்களிலும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாத ஊழியர்களுக்கு நிரந்தர. நியமனம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

பெலியத்த சந்தியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஐந்துக்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு இது பொருந்தும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் வளைகுடா யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் இழப்பீடு கிடைக்க ஆவன செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

டன் பயணம் செய்து காயமடைந்த பாக்கியநாதர் புஸ்பராணி (27) என்பவர் இறந்தவரின் சகோதரியின் மகளாவார்.

மேலும் ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற ஒரு வீதி விபத்தில் சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த குமரேசன் வயது (75) என்பவர் தலையில் காயமடைந்துயாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(88),(நி)


யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தினசரி காலை 10-30 மணிக்கு மட்டும்

" மண்ணுக்காக "

தினசரி மாலை 4-00 மணி 6-00 மணி காட்சிகளாக

CHUCK NORRIS நடித்த

BRAD-DOCK

MISSING IN ACTION - III (தாக்குதல் சித்திரம்)

ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில் பி. ப. 2-00 மணிக்கு மட்டும்

''ஒளி வீச்சு''

யூன் - 94 காண்பிக்கப்படும்.

(சி-10131)


பதில்: பாராளுமன்றம் எம் போராட்ட வடிவத்தில் ஒரு அங்கமே தவிர பாராளுமன்றத்தினூடாக பிரச்

### பதவி

இப்பதவிப் போட்டி காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியில் மேலும் பிளவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறு ஏற்படின் கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவது மிகவும் கடினமான காரியமாக இருக்கும் எனவும் ஜனாதிபதிடி.பி. விஜேதுங்கா கருதுவதாகத் தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினரிடையே நிலவும் பிளவினை சரிசெய்ய முயற்சிக்கும் அதே வேளைஜனாதிபதி தேர்தலை பதவிக் காலத்துக்கு முன்பே நடத்திவிட டி பி விஜேதுங்கா ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

### தொடரும்

வாறு செய்வதாக ஜனாதிபதி உறுதி அளித்துள்ளார் எனவும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை விசாரணை மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. சுமார் ஒன்றரை மாத இடைவெளியின்பின் பூந்தமல்லி சிறையில் உள்ள நீதிமன்றில் இவ் விசாரணைகள் ஆரம்பித்துள்ளன.

### தியாகி

கூட்டங்களும்இடம்பெற இருக்கின்றன- வட்ட மட்டத்தில் பொதுப்பந்தல் அமைக்கப்பட்டு திலீபனின் திருவுருவப் படம் வைத்து ஈகச் சுடரேற்றப்பட்டு காலை 7 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை மக்கள் அடையாள உண்ணாவிரதம் இருப்பர். பொதுஸ்தாபனங்கள், சங்கங்கள், கழகங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் சுழற்சிமுறையில் இவற்றில் பங்குபற்றுவர்.

இறுதிநாள், 26-09-94-ல் கோட்ட மட்டத்தில் பொதுப்பந்தல் அமைக்கப்பட்டு காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு பொதுக்கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன.

## தமிழீழ மக்களுக்கோர் உருக்கமான வேண்டுகோள்

செல்வச்சந்நிதி தேர்த்திருவிழாவின் போது எனது மனைவியின் தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது. எடுத்தவர்கள் தயவுகூர்ந்து அதனை திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். (தாலிக்கொடியை இழந்த நிலையில் தினமும் அழுத கண்ணீருடன் உணவின்றி இருக்கின்றார்.) அல்லது கடித மூலமாவது தொடர்பு கொள்ளுங்கள், பெற்றுத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானங்கள் வழங்கப்படும். மற்றும் யாழ். மாவட்ட நகைக்கடை உரிமையாளர்களே சந்தேகத்திற்கிடமானவர்கள் தாலிக்கொடி விற்கவந்தால் அண்மையிலுள்ள காவல்துறையினருக்கு உடன் அறிவிக்கவும்.

தகவல்:

த. சண்முகலிங்கம்
(கணவர்)

வன்னிச்சி கோவிலடி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(9179)

## மரண அறிவித்தல்

### இராசு சிவசுந்தரம்

நீர்வேலியை பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு சிவசுந்தரம் 22-8-94 அன்று அகால மரணமானார். இவர் யோகேஸ்வரியின் அன்பு கணவரும், சிவரூபன் (A. S. ஆறுமுகம் மைந்தர்கள் ஸ்தாபனம்), கலாநிதி, சதாரூபன், உஷாநிதி (யாழ் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 23-8-94 இன்று 4-00மணிக்கு கோம்பயன் மயானத்திற்கு இறுதி கிரியைக்காக எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

சிவரூபன்
(மகன்)

506|1 கே. கே. எஸ். வீதி,
மனோகரா தியேட்டர் முன்பாக
யாழ்ப்பாணம்.

(9180)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது